புதுச்சேரி அரசு
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
மீன்பிடி துறைமுக வளாகம், தேங்காய்திட்டு
புதுச்சேரி-605004
****

பா.எண்:1157/மீவ/இபி/வக(மீன்பிடி) விதிகள் /2026-27 தேதி: 24.11.2026

பொது அறிவிப்பு

பொருள்: மீன்வளம் – இந்திய அரசு – வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிக் கப்பல்கள்) விதிகள், 2026 – திருத்தப்பட்ட வரைவு விதிகள் – தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல் – மீனவ மக்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் கோருதல் – தொடர்பாக.

பார்வை: துணை ஆணையர் (மீன்வளம்) மீன்வளத்துறை, மத்திய மீன்வள அமைச்சகம், புது டில்லி, அவர்களின் எண்.j-1102101/15/2025-Fy(E-26848) 30.10.2026 தேதியிட்ட கடிதம்.

****

மேற்கண்ட பொருள் தொடர்பாக, இந்திய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் துணை ஆணையர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ,மத்திய மீன்வள தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் (CIFNET), தனது கடித எண் CORR-TMSR/1/2026-TRG, நாள் 26.10.2026-இல், முன்மொழியப்பட்ட **வணிக கப்பல் போக்குவரத்து (மீன்பிடி கப்பல்) விதிகள் - 2026 (Merchant Shipping (Fishing Vessels) Rules, 2026)** தொடர்பான வரைவு விதிகளை இறுதி செய்வதற்கான கால அட்டவணை மற்றும் செயல்பாடுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

2. அதன்படி, எஞ்சியுள்ள ஆலோசனைச் செயல்முறைகளை விரைவுபடுத்தி, மேற்படி விதிகளை உரிய காலத்தில் இறுதி செய்வதற்காக, அனைத்து கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் மேற்படி வரைவு விதிகளை அந்தந்த மாநில பிராந்திய / மொழிகளில் மொழிபெயர்த்து, சம்பந்தப்பட்ட மீனவ மக்களிடம் கொண்டு சேர்த்து, அவர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று, அவற்றை **05.12.2026-க்குள்** சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

3. இதனை தொடர்ந்து, **தமிழில் மொழிபெர்யர்க்கப்பட்ட திருத்தப்பட்ட வரைவு வணிக கப்பல் போக்குவரத்து (மீன்பிடி கப்பல்) விதிகள் 2026-னை** புதுச்சேரி அரசின் இணையதள முகவரியில் **(www.py.gov.in)** அனைத்து புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்ட மீனவர்கள், மீனவர் கூட்டுறவு சங்கங்கள், மீனவர் கிராம பஞ்சாயத்து மக்கள் குழு, கோவில் திருப்பணி குழு, இயந்திர விசைப்படகு உரிமையாளர்கள் நல சங்கம், பைபர் கட்டுவலை விசைப்படகு உரிமையாளர்கள் சங்கம், பைபர் கட்டுமர உரிமையாளர்கள் சங்கம் மற்றும் பிற மீனவ அமைப்புகளின் பரிந்துரைகள் / கருத்துக்கள் வழங்குவதற்கு ஏதுவாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

4.மேற்படி திருத்தப்பட்ட வரைவு வணிக கப்பல் போக்குவரத்து (மீன்பிடி கப்பல்) விதிகள் 2026- ன் மீது ஏதேனும் கருத்துக்கள் பரிந்துரைகள் / இருப்பின் அதனை எழுத்துபூர்வமாக வரும் **05.12.2026 மாலை 5.00 மணிக்குள்** புதுச்சேரி தேங்காய்திட்டு, மீன்பிடி துறைமுகம் வளாகத்தில் அமைந்துள்ள இயக்குனர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது மின்னஞ்சல் **(fish@py.gov.in)** மூலமாகவோ சமர்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

5. மேலும், மேற்படி வரைவு விதிகள் தொடர்பான விளக்கங்களைப் பெறுவதற்கும், விதிகளின் நோக்கம் மற்றும் அவற்றின் பின்னணியில் உள்ள காரணங்களை அறிந்துகொள்வதற்கும், CIFNET நிறுவனத்தின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பங்குதாரர்கள் ஆலோசனைக் கூட்டம் 11.12.2026 அன்று நடைபெற உள்ளது. அக்கூட்டம் நடைபெறும் இடம் மற்றும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

6. எனவே, அனைத்து புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்ட மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், மீனவப் பெருமக்கள், படகு உரிமையாளர்கள் மற்றும் இதர தொடர்புடைய பங்குதாரர்கள் அனைவரும் அக்கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு, தங்களது கருத்துகள், சந்தேகங்கள் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவித்து, மேற்படி வரைவு விதிகள் தொடர்பான விளக்கங்களைப் பெற்று, ஆலோசனைச் செயல்முறையில் ஆக்கப்பூர்வமாகப் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

DEPARTMENT OF FISHERIES & FISHERMEN WELFARE ★ PUDUCHERRY

(அ. முகமது இஸ்மாயில்)
இயக்குநர்

பெறுநர் :

1. இயக்குநர், தகவல் தொழில்நுட்ப இயக்ககம், --- புதுச்சேரி. — இக்கடிதத்துடன் இணைத்துள்ள வரைவு விதியினை தங்களது இணையதள பக்கத்தில் மீனவ மக்களின் பார்வைக்கு தெரியப்படுத்தும்படி பதிவேற்றம் செய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
2. துணை இயக்குநர் (இயந்திரப்பிரிவு),-- புதுச்சேரி / காரைக்கால் — தக்க நடவடிக்கைக்காக 11.12.2026 அன்று புதுச்சேரியில் CIFNET அதிகாரிகளால் நடத்தப்படும் பங்குதாரர்கள் கூட்டத்தை சுமூகமாக நடத்துவதற்காக அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது.
3. உதவி இயக்குநர், மீன்வளத்துறை,--- மாஹி. — தக்க நடவடிக்கைக்காக மற்றும் 14.12.2026 அன்று எர்ணாகுளத்தில் CIFNET அதிகாரிகளால் நடத்தப்படும் பங்குதாரர்கள் கூட்டத்தை சுமூகமாக நடத்துவதற்காக அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது.
4. உதவி இயக்குநர், மீன்வளத்துறை,--- ஏனாம் — தக்க நடவடிக்கைக்காக மற்றும் 03.12.2026 அன்று காக்கிநாடாவில் CIFNET அதிகாரிகளால் நடத்தப்படும் பங்குதாரர்கள் கூட்டத்தை சுமூகமாக நடத்துவதற்காக அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

நகல் தகவலுக்காக அனுப்பப்படுகிறது :

1. ஆணையர் மற்றும் அரசு செயலர் ,(மீன்வளம்) புதுச்சேரி.
2. மீன்வளத்துறை அமைச்சர் அவர்களின் தனி செயலர், புதுச்சேரி.

இந்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டியது

அசாதாரண அரசிதழ், பகுதி II, பிரிவு 3, உட்பிரிவு (i)

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம்

அறிவிக்கை

புதுடில்லி,_____ செப்டம்பர், 2026

G.S.R. ____ (E). – வணிகக் கப்பல் போக்குவரத்துச் சட்டம், 2025 (2025 ஆம் ஆண்டின் 24 ஆம் சட்டம்) பிரிவுகள் 264(1), 264(2), 265(2), 265(3), 271(a), 273(1), 273(2), 275(1), 280(1) மற்றும் 280(2) ஆம் பிரிவின் (b), (c), (d), (j), (k), (m) ஆகிய உட்பிரிவுகளால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தியும், இவ்விதிகளுக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளத் தவறிய செயல்கள் தொடர்பானவற்றைத் தவிர்த்து, வணிகக் கப்பல் போக்குவரத்து (இந்திய மீன்பிடிப் படகுகளின் பதிவு) விதிகள், 1988 மற்றும் வணிகக் கப்பல் போக்குவரத்து (இந்திய மீன்பிடிப் படகுகளின் ஆய்வு) விதிகள், 1988 ஆகியவற்றை மாற்றீடு செய்தும், மத்திய அரசு பின்வரும் விதிகளை இதன்மூலம் இயற்றுகிறது, அதாவது:—

அத்தியாயம் – I

முன்னுரை

1. குறுந்தலைப்பு, தொடக்கம் மற்றும் பயன்பாடு (SHORT TITLE, COMMENCEMENT AND APPLICATION). -

(1) இவ்விதிகள், வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிக் கலன்கள்) விதிகள், 2026 என அழைக்கப்படும்.

(2) இவ்விதிகள், அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

(3) வெளிப்படையாக வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், இவ்விதிகள், அது எங்கு இருந்தாலும், ஒவ்வொரு இந்திய மீன்பிடிக் கலனுக்கும் பொருந்தும்.

(4) உரிமம் வழங்குதல், மீன்பிடி நடவடிக்கைகள், பருவகால மீன்பிடித் தடைகள், மீன்பிடி உபகரணங்கள் மீதான கட்டுப்பாடுகள், மீன்பிடி மண்டலங்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், கடல்சார் மீன்வளர்ப்பு நடவடிக்கைகள், பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்தல், மீன்வள மேலாண்மை மற்றும் பாரம்பரிய மீனவர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பு தொடர்பான விதிமுறைகள் உட்பட, அப்போதைக்கு நடைமுறையில் உள்ள எந்தவொரு மாநில கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டத்தின் விதிகளையும் இவ்விதிகளில் உள்ள எதுவும் பாதிக்கவோ, மேலோங்கிச் செயல்படவோ அல்லது வலுவிழக்கச் செய்யவோ கூடாது.

(5) இவ்விதிகளின் அத்தியாயங்கள் III மற்றும் VI ஆகியவற்றின் நோக்கங்களுக்காக, 45 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடைய கலன்கள், கேப் டவுன் ஒப்பந்தத்தின் தேவைகளுக்கு இணங்க வேண்டும்.

(6) ஏற்கனவே உள்ள கலன்களில் வழங்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாகச் செயல்படுத்துவது சாத்தியமில்லை எனப் பதிவாளர் முடிவு செய்தால், ஒரு திட்டத்தின்படி, விதி 24-இன் ஏற்பாடுகளை அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்குள்ளும், விதிகள் 22, 23, 25, 27, 29, 31, 38 மற்றும் 39 ஆகியவற்றின் ஏற்பாடுகளை அதிகபட்சம் 2 ஆண்டுகளுக்குள்ளும் படிப்படியாகச் செயல்படுத்தலாம்.

(7) கலனின் செயல்பாட்டுப் பகுதி மற்றும் கலனின் வகை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அத்தியாயம் VI-இல் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்திர ஆய்வை மேற்கொள்வது நியாயமற்றதும் நடைமுறைக்கு ஒவ்வாததும் எனக் கருதப்படும் பட்சத்தில், பதிவாளர் அந்தக் கலனுக்கு வருடாந்திர ஆய்விலிருந்து விலக்கு அளிக்கலாம்.

(8) ஒரு குறிப்பிட்ட பொருத்தி, பொருள், உபகரணம் அல்லது கருவி அல்லது அவற்றின் வகை கலனில் பொருத்தப்பட வேண்டும் அல்லது எடுத்துச் செல்லப்பட வேண்டும் எனவும், அல்லது குறிப்பிட்ட ஏற்பாடு செய்யப்பட வேண்டும் எனவும் இவ்விதிகள் கோரும் இடங்களில், அதற்குப் பதிலாக வேறு பொருத்தி, பொருள், உபகரணம் அல்லது கருவி அல்லது அவற்றின் வகையைப் பொருத்தவோ எடுத்துச் செல்லவோ, அல்லது வேறு ஏற்பாட்டைச் செய்யவோ பதிவாளர் அனுமதிக்கலாம்; அவ்வாறு அனுமதிக்கப்படும் மாற்று ஏற்பாடு, சோதனை அல்லது வேறு வழிமுறையின் மூலம், இவ்விதிகளின்படி தேவைப்படும் ஏற்பாட்டிற்கு குறைந்தபட்சம் சமமான செயல்திறன் கொண்டது என அவர் திருப்தியடைந்திருக்க வேண்டும்.

2. வரையறைகள் (DEFINITIONS). -

(1) இவ்விதிகளின் நோக்கங்களுக்காக, சூழல் வேறுவிதமாகக் கோராத வரையில், —

(a) "சட்டம்" என்பது வணிகக் கப்பல் போக்குவரத்துச் சட்டம், 2025 (2025 ஆம் ஆண்டின் 24 ஆம் சட்டம்) என்பதைக் குறிக்கும்.

(b) "நிர்வாகம்" என்பது கடல்சார் நிர்வாக இயக்குநரகத்தைக் குறிக்கும்.

(c) "கட்டுநரின் சான்றிதழ்" என்பது மீன்பிடிக் கலன் முழுமையாகக் கட்டப்பட்டு, கடற்பயணத்திற்குத் தயாரான நிலையில் இருக்கும்போது, அந்தக் கலனின் கட்டுநரால் வழங்கப்படும் சான்றிதழைக் குறிக்கும். அதில், கலனின் சரியான வகைப்பெயர் மற்றும் அவர் மதிப்பிட்ட கலனின் கொள்ளளவு பற்றிய உண்மையான விவரங்கள், கலன் யாருக்காகக் கட்டப்பட்டது, அது கட்டப்பட்ட காலம் மற்றும் இடம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(d) "கேப் டவுன் ஒப்பந்தம்" என்பது 1977 ஆம் ஆண்டின் டோரெமொலினோஸ் மீன்பிடிக் கலன்களின் பாதுகாப்புக்கான சர்வதேச மாநாடு தொடர்பான 1993 நெறிமுறையின் விதிகளைச் செயல்படுத்துவது குறித்த, 2012 ஆம் ஆண்டு அக்டோபர் 11 ஆம் நாள் கேப் டவுனில் கையெழுத்திடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் கேப் டவுன் ஒப்பந்தத்தைக் குறிக்கும்.

(e) "ஆய்வுச் சான்றிதழ்" என்பது இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்திர ஆய்வுக்கு உட்பட்டு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடிக் காலத்திற்கு மீன்பிடிக் கலனுக்கு வழங்கப்படும் சான்றிதழைக் குறிக்கும்.

(f) "சமமான ஏற்பாடுகள்" என்பது இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளிலிருந்து விலகிய அல்லது அவற்றிற்குச் சமமான ஏற்பாடுகளைக் குறிக்கும். அத்தகைய விலகல்கள் தெளிவாக நியாயப்படுத்தப்பட்டு பதிவாளரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்; குறைந்தபட்சப் பாதுகாப்புத் தரநிலைகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக் கூடாது. அதேவேளையில், சமமான பாதுகாப்பு நிலையை நிரூபிக்கும் புதுமையான கலன் வடிவமைப்புகள் மற்றும் பாரம்பரிய மீன்பிடிக் கலன்களுக்கு ஏற்றவாறு அவை அமைந்திருக்கலாம்.

(g) "ஏற்கனவே உள்ள கலன்" என்பது புதிய கலன் அல்லாத இந்திய மீன்பிடிக் கலனைக் குறிக்கும்.

(h) "மீனவர்" என்பது கடலில் மீன்பிடிக் கலனில் எந்தப் பொறுப்பிலும் ஈடுபட்டுள்ள அல்லது ஏதேனும் பணியைச் செய்கின்ற நபரைக் குறிக்கும்; அவருக்கு எந்த முறையில் ஊதியம் வழங்கப்பட்டாலும் இது பொருந்தும். ஆனால், மீன்பிடிக் கலனில் பணியாற்றும் மத்திய அரசு அல்லது மாநில அரசுப் பணியாளர்கள் அல்லது விமானி/கப்பல் வழிகாட்டிகள், மேலும் அத்தகைய கலன் கரையில் இருக்கும்போது மட்டுமே அதில் பணிபுரியும் நபர்கள் இதில் அடங்கமாட்டார்கள்.

(i) "மீன்பிடிக் கலன்" என்பது கடலில் மீன்பிடிக்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கலனைக் குறிக்கும்.

(j) "படிவம்" என்பது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தைக் குறிக்கும்.

(k) "ஃபிரீபோர்டு தளம்" என்பது வானிலைக்கு வெளிப்படும் தளத்தின் அனைத்து திறப்புகளையும் நிரந்தரமாக மூடுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்ட, மேலேயுள்ள முழுமையான தளத்தைக் குறிக்கும்.

(l) "அடையாள அட்டை" அல்லது "ID அட்டை" என்பது இவ்விதிகளின் கீழ் அல்லது வெளிநாட்டு பணியாளர் நியமனம் தொடர்பாகப் பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ், தேவைக்கேற்ப, மீனவருக்கு வழங்கப்படும் புகைப்பட அடையாள ஆவணத்தைக் குறிக்கும்.

(m) "நீளம்" என்பது கீல் கோட்டிலிருந்து அளவிடப்படும் குறைந்தபட்ச வடிவமைக்கப்பட்ட ஆழத்தின் 85 சதவீதத்தில் உள்ள நீர்க்கோட்டின் மொத்த நீளத்தில் 96 சதவீதமாகவோ, அல்லது அதே நீர்க்கோட்டில் முன்தண்டு பகுதியின் முன்புறத்திலிருந்து சுக்கான் தண்டு அச்சு வரையிலான நீளமாகவோ கணக்கிடப்படும்; இவ்விரண்டில் எது அதிகமோ அது எடுத்துக்கொள்ளப்படும். கீல் சாய்வுடன் வடிவமைக்கப்பட்ட கலன்களில், இந்த நீளம் அளவிடப்படும் நீர்க்கோடு, வடிவமைக்கப்பட்ட நீர்க்கோட்டிற்கு இணையாக இருக்க வேண்டும்.

(n) "கூட்ட அழைப்புப் பட்டியல்" என்பது குறிப்பிட்ட கூட்டுமிடத்தில் கூடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் பட்டியலைக் குறிக்கும்.

(o) "கூட்டுமிடம்" என்பது கலனில் பணியாளர்கள் கூடுவதற்காகக் குறிப்பிட்டுக் குறிக்கப்பட்டுள்ள பகுதியைக் குறிக்கும்.

(p) "புதிய கலன்" என்பது இவ்விதிகள் அறிவிக்கப்படும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், அதன் கீல் இடப்பட்ட அல்லது அடையாளம் காணக்கூடிய கட்டுமானத்தின் ஒத்த கட்டத்தை எட்டிய இந்திய மீன்பிடிக் கலனைக் குறிக்கும்.

(q) "நப்மித்ரா இணையதளம்" என்பது இந்திய மீன்பிடிக் கலன்கள் தொடர்பான கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் தகவல் தொடர்புக்காக மத்திய அரசால் உருவாக்கப்பட்ட மின்னணு தளத்தைக் குறிக்கும்; அத்தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள செயலிகள், இடைமுகங்கள் மற்றும் பிற மின்னணு சேவைகளும் இதில் அடங்கும்.

(r) "அறிவிப்பு" என்பது மீன்பிடிக் கலன் தொடர்பாக அவ்வப்போது தலைமை இயக்குநரால் எழுத்து மூலம் வெளியிடப்படும் எந்தவொரு அறிவிப்பு, சுற்றறிக்கை, உத்தரவு அல்லது வழிகாட்டுதலையும் குறிக்கும்.

(s) "பிற கலன்கள்" என்பது மீன்பிடி தொடர்பான நோக்கங்களுக்காக மட்டுமே பிரத்யேகமாகக் கட்டப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்டு பயன்படுத்தப்படும் தாய்க் கலன்/தொழிற்சாலைக் கலன், சரக்குக் கடத்தும்/குளிரூட்டப்பட்ட கலன், கடல்சார் மீன்வளர்ப்பு ஆதரவுக் கலன், ஆராய்ச்சி, ஆய்வு அல்லது மீன்பிடி நடவடிக்கைகளில் மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் கலன் ஆகியவற்றைக் குறிக்கும்; இவை வணிக நோக்கில் மீன்களைப் பிடித்து விற்பனை செய்வதில் ஈடுபடக்கூடாது.

(t) "மீன்பிடிக் கலன்களின் பதிவு மற்றும் உரிமம்" அல்லது "ReAL Craft" என்பது மீன்பிடிக் கலன்களைப் பதிவு செய்வதற்கும், அணுகல் அனுமதி மற்றும் அங்கீகாரக் கடிதம் வழங்குவதற்கும் மத்திய அரசால் நிறுவப்பட்ட இணையவழிச் செயலித் தளத்தைக் குறிக்கும்.

(u) "அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்" என்பது மத்திய அரசின் சார்பில் சட்டப்பூர்வ ஆய்வுகள், தணிக்கைகள், பரிசோதனைகள், ஒப்புதல்கள் மற்றும் சான்றளிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சட்டத்தின் பிரிவு 9-இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வகைப்பாட்டுச் சங்கம் அல்லது பிற அமைப்பைக் குறிக்கும்.

(v) "மீன்பிடிக் கலன் பதிவாளர்" என்பது மீன்பிடிக் கலன்களின் பதிவேட்டைப் பராமரிப்பதற்கும், பதிவு, உரிமை மாற்றம், அடமானம், மாற்றங்கள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், ஒரு பதிவு துறைமுகத்திற்காக மத்திய அரசால் நியமிக்கப்படும் பதிவாளரைக் குறிக்கும்.

(w) "கழிவுநீர்" என்பது பின்வருவனவற்றைக் குறிக்கும்: (a) எந்தவொரு வகையான கழிப்பறைகள், சிறுநீர் கழிப்பிடங்கள் மற்றும் கழிப்பறை வடிகால்களிலிருந்து வெளியேறும் வடிகால் நீர் மற்றும் பிற கழிவுகள்; (b) மருத்துவப்

பயன்பாட்டு இடங்களிலுள்ள (மருந்தகம், நோயாளர் அறை போன்றவை) கழுவும் தொட்டிகள், குளியல் தொட்டிகள் மற்றும் வடிகால்கள் வழியாக வெளியேறும் நீர்; (c) உயிருள்ள விலங்குகள் வைக்கப்பட்டுள்ள இடங்களிலிருந்து வெளியேறும் நீர்; அல்லது (d) மேற்கண்ட வடிகால் நீருடன் கலந்த பிற கழிவுநீர்.

(x) "ஸ்கிப்பர்" என்பது மீன்பிடிக் கலனின் கட்டுப்பாடு மற்றும் தலைமைப் பொறுப்பை வகிக்கும் நபரைக் குறிக்கும்.

(y) "மாநில கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம்" அல்லது "SMFRA" என்பது கடல் மீன்பிடியை ஒழுங்குபடுத்துதல், பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்வதற்காக மாநில அரசால் இயற்றப்பட்ட எந்தவொரு சட்டத்தையும் குறிக்கும்.

(z) "அளவையாளர்" என்பது இவ்விதிகளின் நோக்கங்களுக்காக மத்திய அல்லது மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட நபரைக் குறிக்கும்.

(aa) மீன்பிடிக் கலன் தொடர்பாக "கொள்ளளவு" என்பது பொருந்தக்கூடிய வணிகக் கப்பல் போக்குவரத்து (கப்பல்களின் கொள்ளளவு அளவீடு) விதிகள், 2026-இன் கீழ் நிர்ணயிக்கப்படும் கொள்ளளவைக் குறிக்கும்.

(2) இவ்விதிகளில் வரையறுக்கப்படாத சொற்கள் மற்றும் சொற்றொடர்கள், சூழலுக்கேற்ப, வணிகக் கப்பல் போக்குவரத்துச் சட்டம், 2025 அல்லது கேப் டவுன் ஒப்பந்தத்தில் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள பொருளையே கொண்டிருக்கும்.

(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், "மீன்பிடிக் கலன்கள்" என்பதில் "பிற கலன்களும்" அடங்கும் எனப் பொருள் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய பிற கலன்கள் இவ்விதிகளின் கீழ் பொருந்தக்கூடிய அனைத்து ஒழுங்குமுறைகளுக்கும் இணங்க வேண்டும். மேலும், அந்தக் கலனின் குறிப்பிட்ட செயல்பாட்டின் அடிப்படையில் கூடுதல் தேவைகளை விதிக்கப் பதிவாளருக்கு உரிமை உண்டு.

வரம்புரை: அத்தகைய பிற கலன்கள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட உயிர்காப்பு உபகரணங்கள் (LSA) மற்றும் தீயணைப்பு உபகரணங்கள் (FFA) தொடர்பான திட்டங்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

அத்தியாயம் – II

பதிவு

3. மீன்பிடிக் கலன்களின் பதிவு (REGISTRATION OF FISHING VESSELS). -

(1) ஒவ்வொரு இந்திய மீன்பிடிக் கலனும், சட்டத்தின் பகுதி III-இன் கீழ், மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மீன்பிடிக் கலன் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட வேண்டும்.

(2) இவ்விதிகளின் கீழ் மீன்பிடிக் கலனைப் பதிவு செய்திருப்பது மட்டுமே, மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உரிமையை வழங்காது. அதற்காக ReAL

Craft இணையதளத்தில் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் உரிமம் அல்லது அணுகல் அனுமதி அல்லது அங்கீகாரக் கடிதம் (LOA), அல்லது Nabhmitra இணையதளத்தில் வழங்கப்பட்ட டோக்கன் அவசியமாகும்.

விளக்கம்: (i) இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, "அணுகல் அனுமதி" என்பது நிலையான மீன்வளப் பயன்பாடு (பிரத்தியேகப் பொருளாதார மண்டலம்) விதிகள், 2025-இன் விதி 2(1)(a)-இல் வரையறுக்கப்பட்டுள்ள அணுகல் அனுமதியைக் குறிக்கும். (ii) "அங்கீகாரக் கடிதம்" அல்லது "LOA" என்பது இந்தியக் கொடியுடன் இயங்கும் மீன்பிடிக் கலன்கள் மூலம் ஆழ்கடலில் நிலையான மீன்வளப் பயன்பாட்டிற்கான வழிகாட்டுதல்கள், 2025-இன் பத்தி 1(q)-இல் வரையறுக்கப்பட்டுள்ள அங்கீகாரக் கடிதத்தைக் குறிக்கும்.

(3) தனித்துவமான பதிவு எண், துறைமுகம்/மாநிலக் குறியீடு மற்றும் கலனின் பெயர் ஆகியவை நிர்ணயிக்கப்பட்ட முறையில் கலனில் குறிக்கப்படாவிட்டால், இவ்விதியின் கீழ் வழங்கப்பட்ட எந்தப் பதிவும் செல்லுபடியாகாது.

(4) பாதுகாப்பு, கடற்பயணத் தகுதி, கடல்சார் பாதுகாப்பு அல்லது தரப்படுத்தல் ஆகியவற்றின் நலன் கருதி, எந்தவொரு வகை அல்லது பிரிவைச் சேர்ந்த மீன்பிடிக் கலன்களின் பதிவு மற்றும் ஆய்வுப் பணிகளை தலைமை இயக்குநர் ஏற்று மேற்கொள்ளலாம் அல்லது மீண்டும் மேற்கொள்ளலாம். இதற்கான உத்தரவு அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும்.

(5) இந்திய மீன்பிடிக் கலனைப் பதிவு செய்வதற்கான உரிய பதிவு அதிகாரம் அல்லது அதிகார வரம்பு தொடர்பாக ஏதேனும் தகராறு ஏற்பட்டால், அது தலைமை இயக்குநரிடம் அனுப்பப்பட வேண்டும். அவரது முடிவே இறுதியானதாகும்.

(6) இவ்விதியின் கீழ் உள்ள அனைத்து புதிய கலன்களும், இவ்விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட மீன்பிடிக் கலன் ஆய்வுத் தரநிலைகள், நிலைத்தன்மை, கட்டுமானம் மற்றும் உபகரணத் தேவைகள், மேலும் மத்திய அரசால் அறிவிக்கப்படும் பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்புத் தேவைகள் ஆகியவற்றுக்கு இணங்க வேண்டும்.

(7) சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி, இந்திய மீன்பிடிக் கலனாகப் பதிவு செய்யத் தகுதியுடையதாக அந்தக் கலன் தொடர்ந்து இருக்கும் வரை, அதன் பதிவுச் சான்றிதழ் செல்லுபடியாகும். அதற்கு குறிப்பிட்ட காலவரையறை அல்லது நிலையான செல்லுபடிக் காலம் எதுவும் பொருந்தாது.

4. பதிவுச் சான்றிதழுக்கான விண்ணப்பம் (APPLICATION FOR CERTIFICATE OF REGISTRY). -

(1) மீன்பிடிக் கலனுக்கான பதிவுச் சான்றிதழ் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், உரிமையாளர் வசிக்கும் இடத்திற்கு அல்லது மீன்பிடிக் கலன் கட்டப்பட்ட அல்லது அடிப்படையாகக் கொண்டுள்ள இடத்திற்கு அருகிலுள்ள பதிவு துறைமுகத்தின் பதிவாளருக்கு ReAL Craft இணையதளத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) ஒவ்வொரு மீன்பிடிக் கலனின் உரிமையாளரும், பொருந்துமிடத்தில், கட்டுநர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது பதிவாளர் மூலம், வணிகக் கப்பல் போக்குவரத்து (கலன்களின் கொள்ளளவு அளவீடு) விதிகள், 2026-இன்படி அதன் கொள்ளளவை நிர்ணயிக்கச் செய்ய வேண்டும்.

(3) அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்: —

(a) விண்ணப்பதாரரின் உரிமை தொடர்பான அறிவிப்பு, FVR படிவம் I அல்லது படிவம் II-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அல்லது பொருந்துமிடத்தில் SMFRA-களால் அங்கீகரிக்கப்பட்ட உரிமை ஆவணங்கள்;

(b) கலனுக்கான உரிமை ஆவணங்கள், கிராம நிர்வாகச் சான்றிதழ்கள், வாரிசுரிமை ஆவணங்கள், பதிவு செய்யப்பட்ட விற்பனை ஒப்பந்தங்கள், மரபுரிமை ஆவணங்கள் போன்றவை, பொருந்துமிடத்தில்;

(c) கட்டுநரின் சான்றிதழ். நியாயமான காரணங்களால் உரிமையாளர் அச்சான்றிதழைச் சமர்ப்பிக்க இயலாதபட்சத்தில், எழுத்து மூலம் காரணங்களைப் பதிவு செய்த பின்னர், பதிவாளர் திருப்தியளிக்கும் வகையிலான மாற்றுக் கட்டுமான ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும் நிபந்தனையுடன், அச்சான்றிதழைச் சமர்ப்பிப்பதிலிருந்து விலக்கு அளிக்கலாம்;

(d) துணைவிதி (3)-இன் பிரிவு (c)-இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில், கலன் வடிவமைக்கப்பட்டுள்ள செயல்பாட்டுப் பகுதி மற்றும் மீன்பிடி/தொடர்புடைய நடவடிக்கைகளின் முறை(கள்) குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்;

(e) பொருந்துமிடத்தில், இயந்திரம், கொள்ளளவு, பரிமாணங்கள், கலனின் அடிப்பகுதி/உடற்பகுதிக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள் மற்றும் உந்துவிசை முறை பற்றிய விவரங்கள்;

(f) ஏற்கனவே இருந்தால், முந்தைய பதிவின் விவரங்கள்;

(g) ஏதேனும் இருந்தால், அடமானம், காப்பீடு மற்றும் மானிய விவரங்கள்;

(h) பொருந்துமிடத்தில், கலனில் பொருத்தப்பட்டுள்ள தகவல் தொடர்பு மற்றும் வழிசெலுத்தல் உபகரணங்களின் விவரங்கள்;

(i) பொருந்துமிடத்தில், உயிர்காக்கும் சாதனங்கள் மற்றும் தீயணைப்பு சாதனங்களின் விவரங்கள்;

(j) விதிகளின் தேவைகளுக்கு ஏற்ப கலனில் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என உரிமையாளர் அளிக்கும் அறிவிப்பு; மற்றும்

(k) பதிவுக்காகக் கோரப்படக்கூடிய பிற தகவல்கள்.

5. கலனின் பெயர் (NAME OF VESSEL). -

(1) பதிவுக்கான விண்ணப்பத்தில், கலனுக்கு வழங்க முன்மொழியப்படும் பெயரை உரிமையாளர் குறிப்பிட வேண்டும். பதிவாளர் அந்தப் பெயருக்கு ஒப்புதல் அளித்த பின்னர், அந்தப் பெயரிலேயே கலன் பதிவு செய்யப்படும்.

(2) உரிமையாளர் முன்மொழிந்த பெயர் ஏற்கனவே வேறொரு பதிவு செய்யப்பட்ட கலனுக்குச் சொந்தமானதாக இருந்தால், ReAL Craft இணையதளம் அதனைத் தெரிவித்து, பதிவுக்காக மாற்றுப் பெயரை முன்மொழியுமாறு உரிமையாளரைக் கோரும்.

6. ஆய்வு (INSPECTION). -

முழுமையான விண்ணப்பம் பெறப்பட்டவுடன், ஆய்வாளர் அல்லது தகுதிவாய்ந்த கப்பல் வடிவமைப்புப் பொறியாளர் (Naval Architect) இடம்பெற்றுள்ள மாநில மீன்வளத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட குழு, கலனை ஆய்வு செய்து, பின்வருவன சரிபார்க்கப்பட்ட பின்னர் ஆய்வுச் சான்றிதழை வழங்க வேண்டும்:—

(a) கலனின் வடிவமைப்பு, அமைப்பு மற்றும் அதிலுள்ள உபகரணங்கள், அந்தக் கலன் வடிவமைக்கப்பட்டுள்ள செயல்பாட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்படும் மீன்பிடி/தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்;

(b) பொருந்துமிடத்தில், மீன்களைக் கையாளுதல், பாதுகாத்தல் அல்லது சேமித்து வைப்பதற்கான உரிய வசதிகள் கலனில் இருக்க வேண்டும்;

(c) பாதுகாப்பான மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் தேவையான வழிசெலுத்தல் மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்கள் கலனில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்; மற்றும்

(d) இவ்விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நிலைத்தன்மை, கட்டமைப்பு, உபகரணங்கள் மற்றும் கடற்பயணத் தகுதி தொடர்பான தரநிலைகளுக்கு கலன் இணங்கியிருக்க வேண்டும்.

7. கலனுக்கான பதிவுச் சான்றிதழ் வழங்குதல் (GRANT OF CERTIFICATE OF REGISTRY OF THE FISHING VESSEL). -

(1) விண்ணப்பதாரரின் விவரங்கள், கலன் மீதான அவரது உரிமைத் தகுதி மற்றும் ஆய்வுச் சான்றிதழ் ஆகியவற்றை உறுதிப்படுத்திய பின்னர், பதிவாளர் விண்ணப்பத்திற்கு ஒப்புதல் அளிப்பார். அதன்பின், ReAL Craft இணையதளத்தில் மின்னணு முறையில் சரிபார்க்கும் வசதியுடன் கூடிய பதிவு எண்ணைக் கொண்ட பதிவுச் சான்றிதழ் உருவாக்கப்படும்.

(2) ஒரு மீன்பிடிக் கலனுக்கு ஒருமுறை ஒதுக்கப்பட்ட பதிவு எண், அந்த மீன்பிடிக் கலன் மீண்டும் பதிவு செய்யப்படும் சூழ்நிலையைத் தவிர, மாற்றப்படக் கூடாது.

8. பதிவுச் சான்றிதழ் (CERTIFICATE OF REGISTRY). -

(1) FVR படிவம் III-இல் உள்ள பதிவுச் சான்றிதழில், இந்திய மீன்பிடிக் கலன் தொடர்பாகப் பின்வரும் விவரங்கள் இடம்பெற வேண்டும், அதாவது: —

(a) மீன்பிடிக் கலனின் பெயர், அது கட்டப்பட்ட இடம் மற்றும் அது சார்ந்துள்ள துறைமுகம்;

(b) மீன்பிடிக் கலனின் பாய்மர/இயக்க அமைப்பு (Rig), வகை மற்றும் கொள்ளளவு;

(c) மீன்பிடிக் கலனுக்கு ஒதுக்கப்பட்ட பதிவு எண்;

(d) மீன்பிடிக் கலனின் உரிமையாளரின் பெயர், தொழில் மற்றும் வசிப்பிடம்;

(e) மீன்பிடிக் கலன் தொடர்பாக உரிமையாளரால் ஏற்படுத்தப்பட்டுள்ள அடமானங்கள் ஏதேனும் இருந்தால் அவற்றின் விவரங்கள்; மற்றும்

(f) பரிந்துரைக்கப்படக்கூடிய பிற விவரங்கள்.

(2) பதிவாளர், சுங்கத்துறை அல்லது பாதுகாப்பு அமைப்புகளின் அலுவலர், வணிகக் கடல்சார் துறை (Mercantile Marine Department) அலுவலர் அல்லது SMFRA-இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் கோரும்போது, மீன்பிடிக் கலனின் உரிமையாளர், ஸ்கிப்பர் அல்லது அக்கலனின் பொறுப்பிலுள்ள வேறு நபர் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

9. கலனின் பெயர், பதிவு எண் முதலியவற்றை எழுதும் முறை (MANNER OF PAINTING OF NAME AND REGISTRATION NUMBER, etc. -

(1) பதிவு துறைமுகத்தைக் குறிக்கும் தனித்துவ எழுத்துகள், மீன்பிடிக் கலன் பதிவு செய்யப்பட்டுள்ள பெயர் மற்றும் அதற்கு ஒதுக்கப்பட்ட பதிவு எண் ஆகியவை, கலனின் பின்புறத்திற்கு அருகில் இருபுறங்களிலும், மாறுபட்ட பின்னணியில் தெளிவாகத் தெரியும் எண்ணெய் வண்ணத்தில், ஆங்கிலம், பிராந்திய மொழி மற்றும் இந்தி எழுத்துகளில் எழுதப்பட வேண்டும்.

(2) எழுதப்படும் அனைத்து எழுத்துகளும் எண்களும் ஒவ்வொரு நிகழ்விலும் பதிவாளர் நிர்ணயிக்கும் அளவில் இருக்க வேண்டும். எனினும், அவற்றின் உயரம் ஒரு டெசிமீட்டருக்கும், அகலம் இரண்டு சென்டிமீட்டருக்கும் குறைவாக இருக்கக் கூடாது.

(3) மீன்பிடிக் கலனுடன் இணைக்கப்பட்டுள்ள சிறு படகுகளிலும் (Dinghies) அதே எழுத்துகளும் எண்களும் எழுதப்பட வேண்டும்.

(4) ஒவ்வொரு மீன்பிடிக் கலனிலும், மாற்றியமைக்க முடியாத தனித்துவ அடையாளத் தகடு (Unique Identification Plate) ஒன்று இருக்க வேண்டும். அதில் QR குறியீடு நிரந்தரமாகப் பொறிக்கப்படவோ அல்லது பாதுகாப்பாகப் பொருத்தப்படவோ வேண்டும்.

(5) அந்த QR குறியீடு, பதிவு, உரிமை, உரிமம், ஆய்வு வரலாறு மற்றும் அவசரத் தொடர்பு விவரங்களைக் கொண்ட ReAL Craft தரவுத்தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

10. பெயர் மாற்றம் (CHANGE OF NAME). -

(1) மீன்பிடிக் கலன் பதிவு செய்யப்பட்டுள்ள பெயரை, பதிவாளரின் முன் அனுமதியின்றி மாற்றவோ திருத்தவோ கூடாது.

(2) பெயர் மாற்றத்திற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், அந்த மீன்பிடிக் கலனின் பதிவு துறைமுகப் பதிவாளரிடம் ReAL Craft இணையதளம் வழியாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும், முன்மொழியப்படும் பெயர் மாற்றத்திற்கான காரணங்களும் அதில் குறிப்பிடப்பட வேண்டும்.

(3) பெயர் மாற்றம் நியாயமானதும் அவசியமானதும் எனப் பதிவாளர் திருப்தியடைந்தால், வழக்கின் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பெயர் மாற்றத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

(4) மீன்பிடிக் கலன் அடமானத்திற்கு உட்பட்டதாக இருந்தால், பெயர் மாற்ற விண்ணப்பத்துடன் அடமானதாரரின் ஒப்புதலும் இணைக்கப்பட வேண்டும்.

(5) பதிவாளர் ஒப்புதல் அளித்தவுடன், புதிய பெயர் ReAL Craft இணையதளத்திலும் மீன்பிடிக் கலனின் பதிவுச் சான்றிதழிலும் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், இவ்விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட முறையில் அந்தப் பெயர் கலனில் குறிக்கப்பட்டு எழுதப்பட வேண்டும்.

11. மாற்றங்களைப் பதிவு செய்தல் (REGISTRY OF ALTERATIONS). -

(1) மீன்பிடிக் கலன் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு மாற்றமும், அந்த மாற்றம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள், ReAL Craft இணையதளத்தில் விண்ணப்பம் சமர்ப்பிப்பதன் மூலம், பதிவு துறைமுகப் பதிவாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

(2) அத்தகைய மாற்றம், மீன்பிடிக் கலனின் முக்கிய பரிமாணங்கள், கொள்ளளவு, உந்துவிசை அமைப்பு, இயந்திரத் திறன், உடற்பகுதிப் பொருள் அல்லது நிலைத்தன்மைப் பண்புகள் ஆகியவற்றை குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்காததாக இருந்தால், பதிவாளர் அந்த மாற்ற விவரங்களை ReAL Craft இணையதளத்தில் பதிவு செய்வார். அவை மீன்பிடிக் கலனின் பதிவுச் சான்றிதழிலும் பிரதிபலிக்கும்.

(3) துணைவிதி (2)-இல் குறிப்பிடப்பட்டுள்ள கூறுகளை மாற்றம் குறிப்பிடத்தக்க அளவில் பாதித்தால், புதிய பதிவு எண்ணும் பதிவுச் சான்றிதழும் வழங்கப்படும்.

12. பதிவு துறைமுகத்தை மாற்றுதல் (TRANSFER OF PORT OF REGISTRY). -

(1) இந்திய மீன்பிடிக் கலனில் உரிமையாளர் அல்லது அடமானதாரர் என்ற வகையில் உரிமை/ஆர்வம் கொண்டுள்ள அனைத்து நபர்களும், அந்தக் கலனின்

பதிவை ஒரு துறைமுகத்திலிருந்து மற்றொரு துறைமுகத்திற்கு மாற்ற விரும்பினால், அதற்காக ReAL Craft இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

(2) உத்தேசிக்கப்பட்ட புதிய பதிவு துறைமுகத்தின் பதிவாளர், விதி 9-இன் ஏற்பாடுகளின்படி புதிய பதிவு எண்ணும் அந்தத் துறைமுகத்தைக் குறிக்கும் தனித்துவ எழுத்துகளும் மீன்பிடிக் கலனில் முறையாகக் குறிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்திய பின்னர், புதிய பதிவுச் சான்றிதழை வழங்குவார்.

13. பதிவை முடித்தல் (CLOSING OF THE REGISTRY)

(1) ஒரு கலன் இந்திய மீன்பிடிக் கலனாக இல்லாமல் போன நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், அதன் உரிமையாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர் பதிவை முடிப்பதற்காகப் பதிவாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) கலன் உரிமையாளர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட முகவர் விண்ணப்பித்தவுடன், சட்டத்தின் பிரிவு 43-இன் கீழ் பின்வரும் சூழ்நிலைகளில் கலனின் பதிவு முடிக்கப்பட வேண்டும்: —

(a) சட்டத்தின் பிரிவு 20-இன் துணைப்பிரிவு (7)-இல் குறிப்பிடப்பட்டுள்ள கலன்கள் தொடர்பாக; அல்லது

(b) கலன் வெளிநாட்டு உரிமையாளருக்கு விற்கப்படும் போது:

வரம்புரை: கலன் வெளிநாட்டு உரிமையாளருக்கு விற்கப்பட்டு பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டிருந்தாலும், பின்னர் அது மீண்டும் இறக்குமதி செய்யப்பட்டு, இவ்விதிகள் மற்றும் சட்டத்தின் கீழ் பொருந்தக்கூடிய அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டால், அதனை மீண்டும் பதிவு செய்யலாம்.

(3) விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் பதிவாளர் பதிவை முடித்து, பதிவு முடித்ததற்கான சான்றிதழை வழங்க வேண்டும்.

(4) எந்தவொரு துறைமுகத்திலும் இந்திய மீன்பிடிக் கலனின் பதிவு முடிக்கப்பட்டால், பதிவு முடிக்கப்பட்ட கலனின் விவரங்களையும், பதிவு முடிக்கப்பட்ட சூழ்நிலைகளையும் ReAL Craft இணையதளம் உடனடியாகப் பதிவு செய்ய வேண்டும்.

14. மீன்பிடிக் கலனின் உரிமையை அல்லது அதிலுள்ள உரிமைப் பங்கினை மாற்றுதல் (TRANSFER OF OWNERSHIP OF A FISHING VESSEL OR INTEREST THEREIN). -

(1) இந்திய மீன்பிடிக் கலனின் உரிமையாளர் அல்லது கூட்டுரிமை நிலவும் பட்சத்தில் அனைத்து உரிமையாளர்களும், அந்த மீன்பிடிக் கலனை அல்லது அதிலுள்ள ஏதேனும் உரிமைப் பங்கை மாற்ற விரும்பினால், அதற்காக ReAL Craft இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) தேவையெனக் கருதும் விசாரணையை மேற்கொண்ட பின்னர், விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மீன்பிடிக் கலனின் உரிமை அல்லது அதிலுள்ள உரிமைப் பங்கு மாற்றத்திற்கு பதிவாளர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(3) முன்மொழியப்பட்ட உரிமை மாற்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, விற்பனை நிறைவு செய்யப்பட்ட பின்னர், உரிமை பெறுபவர் (Transferee), உரிமை அறிவிப்பு, உரிமை மாற்ற ஆவணம் மற்றும் தற்போதுள்ள மீன்பிடிக் கலனின் பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றைத் துறைமுகப் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதன்பின், பதிவாளர் உரிமை மாற்ற விவரங்களை ReAL Craft இணையதளத்தில் பதிவு செய்து, 30 நாட்களுக்குள் புதிய பதிவுச் சான்றிதழை வழங்க வேண்டும்.

15. இந்திய மீன்பிடிக் கலனின் அடமானம் (MORTGAGE OF INDIAN FISHING VESSEL). -

(1) இந்திய மீன்பிடிக் கலன் அல்லது அதிலுள்ள ஏதேனும் உரிமைப் பங்கிற்கான ஒவ்வொரு அடமான ஆவணமும், உரியவாறு FVR படிவம் IV அல்லது படிவம் V-இல் இருக்க வேண்டும்.

(2) அடமான ஆவணம் முறையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திய பின்னர், பதிவாளர் அதனை ஏற்றுக்கொண்ட தேதி மற்றும் நேரத்துடன் ReAL Craft இணையதளத்தில் பதிவு செய்து, அடமான ஆவணத்திலும் அதற்கான ஒப்புதற் குறிப்பைச் செய்ய வேண்டும்.

(3) ஒரே மீன்பிடிக் கலனின் மீது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடமானங்கள் இருந்தால், அவற்றின் முன்னுரிமை நிலைகள் ReAL Craft இணையதளத்தில் உரிய பத்தியில் A, B, C முதலிய ஆங்கில எழுத்துகளின் அகரவரிசைப்படி குறிப்பிடப்பட வேண்டும்.

(4) எந்தவொரு அடமானத்தையும் பதிவு செய்வதற்கு, ஏற்கனவே அடமானதாரர்கள் இருப்பின் அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் தடையின்மைச் சான்று (No Objection Letter) பெறப்பட வேண்டும்.

(5) சட்டத்தின் பிரிவு 27-இன் துணைப்பிரிவு (1)-இன் கீழ் அடமானம் வைக்கப்பட்ட கலனை அல்லது அதன் பங்கை விற்பனை செய்து, அடமானத்தின் கீழ் செலுத்த வேண்டிய தொகையை வசூலிக்க விரும்பும் மீன்பிடிக் கலனின் ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட அடமானதாரரும், அத்தகைய விற்பனை தொடர்பாகப் பதிவாளருக்கு பதினைந்து நாட்களுக்கு முன்கூட்டியே அறிவிப்பு வழங்க வேண்டும்.

(6) அடமானக் கடன் முழுமையாகச் செலுத்தப்பட்டவுடன், அடமான ஆவணத்தில் செய்யப்பட்டுள்ள ரசீது ஒப்புதல் முறையாக உள்ளதா என்றும், அது உரிய சாட்சியத்துடன் உள்ளதா என்றும் உறுதிப்படுத்திய பின்னர், அடமானம் விடுவிக்கப்பட்ட விவரத்தைப் பதிவாளர் ReAL Craft இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்.

(7) அடமானக் கடனின் எந்தவொரு தவணைத் தொகை செலுத்தப்பட்ட விவரமும் ReAL Craft இணையதளத்தில் பதிவு செய்யப்படக் கூடாது.

16. சட்டத்தின் செயல்பாட்டினால் உரிமை மாற்றம் (TRANSFER OF OWNERSHIP BY OPERATION OF LAW). -

(1) சட்டத்தின் செயல்பாடு, வாரிசுரிமை அல்லது மரபுரிமை காரணமாக இந்திய மீன்பிடிக் கலனின் உரிமை ஏதேனும் ஒருவருக்கு மாற்றமடைந்தால், அந்த நபர், மீன்பிடிக் கலனின் உரிமையைத் தாம் பெற்ற சூழ்நிலைகளைக் குறிப்பிட்டு, அத்தகைய உரிமைப் பெறுதலுக்கான ஆதாரங்களான வாரிசுரிமை ஆவணங்கள், சட்ட வாரிசுச் சான்றிதழ்கள், உயில் மெய்ப்புச் சான்று (Probate), வாரிசுரிமைச் சான்றிதழ்கள் அல்லது பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பிற ஆவணங்களை இணைத்து, ReAL Craft இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) பதிவாளர் தாம் பொருத்தமானதாகக் கருதும் விசாரணையை மேற்கொண்டு, விண்ணப்பதாரரின் கோரிக்கை குறித்து திருப்தியடைந்தால், உரிமை மாற்ற விவரங்களை ReAL Craft இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். மேலும், அந்த மாற்றங்கள் மீன்பிடிக் கலனின் பதிவுச் சான்றிதழிலும் பிரதிபலிக்க வேண்டும்.

17. சிறார்களுக்குச் சொந்தமான மீன்பிடிக் கலன்கள் (FISHING VEESELS OWNED BY MINORS). -

(1) ஒரு இந்திய மீன்பிடிக் கலன், சிறாரின் பாதுகாவலர் என்ற முறையில் ஒருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தால், அந்த மீன்பிடிக் கலனின் உரிமை சிறாரிடமே தொடர்ந்து இருக்கும். அவர் வயது வந்தவரானதும், மீன்பிடிக் கலன் தொடர்பான பதிவேட்டுப் பதிவுகளை மாற்றுவதற்காக ReAL Craft இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

(2) அதன்பின், பதிவாளர் விண்ணப்பதாரரின் பெயரில் புதிய சான்றிதழை வழங்க வேண்டும்.

(3) துணைவிதி (2)-இன் கீழ் பதிவுச் சான்றிதழ் வழங்குவதற்கு எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படக் கூடாது.

(4) துணைவிதி (2)-இன் கீழ் விண்ணப்பதாரரின் பெயரில் புதிய சான்றிதழை வழங்கப் பதிவாளர் நடவடிக்கை மேற்கொள்ளும்போது, விண்ணப்பம் அளிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அதனை வழங்க வேண்டும்.

18. தற்காலிகப் பதிவுச் சான்றிதழ் (PROVISIONAL CERTIFICATE OF REGISTRY). -

(1) பதிவாளரிடம் பதிவு செய்வதற்காக விண்ணப்பம் அளிக்கப்பட்டிருந்தும், முந்தைய பதிவிலிருந்து பெற வேண்டிய ஏதேனும் சான்றிதழ் கிடைக்காத காரணத்தினாலோ அல்லது எழுத்து மூலம் பதிவு செய்யப்பட வேண்டிய வேறு ஏதேனும் செல்லுபடியாகும் காரணத்தினாலோ, வழக்கமான பதிவுச் சான்றிதழை வழங்க இயலாத சூழ்நிலையில், இவ்விதிகளுக்கு இணங்குதல் உறுதி செய்யப்பட்ட பின்னர், பதிவாளர் FVR படிவம் VI-இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி தற்காலிகப் பதிவுச் சான்றிதழை வழங்கலாம்.

(2) தற்காலிகச் சான்றிதழ், அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு அல்லது அதிகபட்சம் மூன்று மாதங்களுக்கு, எது பொருந்துமோ அந்தக் காலத்திற்கு செல்லுபடியாகும். வழக்கின் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு அவ்வாறு செய்வது அவசியம் எனப் பதிவாளர் திருப்தியடைந்தால், தற்காலிகச் சான்றிதழின் செல்லுபடிக் காலத்தை மேலும் அதிகபட்சம் இரண்டு மாதங்கள் வரை நீட்டிக்கலாம்.

(3) தற்காலிகச் சான்றிதழின் செல்லுபடிக் காலம் முடிவடையும் போதோ அல்லது வழக்கமான பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும் போதோ, இவ்விரண்டில் எது முந்தையதோ அப்போது, தற்காலிகச் சான்றிதழ் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

19. சான்றிதழ்களின் நகல் பிரதிகளை வழங்குதல் (ISSUE OF DUPLICATE COPIES OF CERTIFICATES). -

(1) அசல் பதிவுச் சான்றிதழ் அழிக்கப்பட்டுவிட்டது, தொலைந்துவிட்டது, தவறவிடப்பட்டுள்ளது, சிதைந்துவிட்டது அல்லது தெளிவிழந்துவிட்டது எனப் பதிவாளர் திருப்தியடைந்தால், உரிமையாளர் ReAL Craft இணையதளத்தில் அளிக்கும் விண்ணப்பத்தின் பேரில், சிவப்பு மையால் "DUPLICATE" எனக் குறிக்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் நகல் பிரதியைப் பதிவாளர் வழங்கலாம். சரிபார்ப்பை எளிதாக்கவும் தவறான பயன்பாடு அல்லது மோசடியான நகல் தயாரிப்பைத் தடுக்கவும், அத்தகைய நகல் சான்றிதழில் அசல் சான்றிதழுடன் இணைக்கப்பட்ட தனித்துவத் தொடர் எண் இடம்பெறலாம்.

(2) பதிவுச் சான்றிதழின் நகல் பிரதிக்கான ஒவ்வொரு விண்ணப்பத்துடனும், அசல் சான்றிதழ் அழிக்கப்பட்ட, தொலைந்த, தவறவிடப்பட்ட, சிதைந்த அல்லது தெளிவிழந்த சூழ்நிலைகள் குறித்த அறிவிப்பு இணைக்கப்பட வேண்டும்.

(3) அசல் சான்றிதழ் தொலைந்துவிட்டது அல்லது தவறவிடப்பட்டுள்ளது என்ற காரணத்தின் அடிப்படையில் நகல் சான்றிதழ் பெறப்பட்ட பின்னர், அசல் சான்றிதழ் உரிமையாளருக்குக் கிடைத்தாலோ அல்லது அவரால் மீண்டும் பெறப்பட்டாலோ, அவர் உடனடியாக அந்த அசல் சான்றிதழைப் பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும். பதிவாளர் அதனை ரத்து செய்ய வேண்டும்.

(4) அசல் சான்றிதழ் சிதைந்துவிட்டது அல்லது தெளிவிழந்துவிட்டது என்ற காரணத்தின் அடிப்படையில் நகல் சான்றிதழ் வழங்கப்பட வேண்டுமெனில், சிதைந்த அல்லது தெளிவிழந்த அசல் சான்றிதழ் பதிவாளரிடம் ஒப்படைக்கப்படாமல் நகல் சான்றிதழ் வழங்கப்படக் கூடாது.

20. உரிமை அறிவிப்பு (DECLARATION OF OWNERSHIP). -

இவ்விதிகளின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு உரிமை அறிவிப்பும், பதிவாளர், சிறப்பு நிர்வாக நடுவர், முதல் வகுப்பு நீதித்துறை நடுவர், மாம்லத்தார் அல்லது உறுதிமொழி ஆணையர் ஆகியோரில் ஒருவரின் முன்னிலையில் செய்யப்பட வேண்டும்.

அத்தியாயம் – III

சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்

21. பொது (GENERAL). -

ஒவ்வொரு மீன்பிடிக் கலனிலும் விதிகள் 22, 23, 24 மற்றும் 25-இல் பரிந்துரைக்கப்பட்டுள்ள சாதனங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்:

வரம்புரை: மத்திய அரசு, அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கை மூலம், சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட வேறு ஏதேனும் விதிகளின் ஏற்பாடுகள் பகுதி XIII-இன் கீழ் வரும் மீன்பிடிக் கலன்களுக்கும் பொருந்தும் என உத்தரவிட்டால், இவ்விதியில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும், அத்தகைய விதிகளின் ஏற்பாடுகள் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கும், அதில் குறிப்பிடப்படும் மாற்றங்கள், தழுவல்கள் அல்லது விலக்குகளுக்கு உட்பட்டும் மட்டுமே மீன்பிடிக் கலன்களுக்குப் பொருந்தும். வெளிப்படையாகக் குறிப்பிடப்படாவிட்டால், அவை தானாகவே தேவையான மாற்றங்களுடன் (mutatis mutandis) பொருந்தும் எனப் பொருள் கொள்ளப்படக் கூடாது.

22. உயிர்காக்கும் சாதனங்கள் (LIFE SAVING APPLIANCES). -

(1) 17 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடைய ஒவ்வொரு மீன்பிடிக் கலனிலும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் உயிர்காக்கும் மிதவைப் படகுகள் (Life rafts) இருக்க வேண்டும்: —

(a) அவற்றில் ஏதேனும் ஒரு மிதவைப் படகு தொலைந்துவிட்டாலோ அல்லது பயன்படுத்த முடியாத நிலைக்குச் சென்றாலோ, கலனில் உள்ள அனைவருக்கும் போதுமான இருக்கை வசதி மீதமிருக்கும் வகையில், உரிய எண்ணிக்கையிலும் கொள்ளளவிலும் அவை இருக்க வேண்டும்;

(b) கலன் நாட்டின் பிராந்தியக் கடல் எல்லைக்குள் செயல்படும்போது, கலனில் உள்ள அனைவருக்கும் போதுமான இருக்கை வசதியளிக்கும் கொள்ளளவுடைய மிதவைப் படகுகளை எடுத்துச் செல்ல பதிவாளர் அனுமதிக்கலாம்;

(c) அவை SOLAS தரநிலைகளின்படி கட்டமைக்கப்பட்டு, SOLAS Pack "A" உடன் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்; மற்றும்

(d) அவை கலனின் இருபுறங்களிலும் வானிலைக்கு வெளிப்படும் தளத்தில் அல்லது திறந்த சேமிப்பு இடத்தில் வைக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட தானியங்கி விடுவிப்பு ஏற்பாடுகளுடன், அதாவது நீர்நிலை அழுத்தத்தால் செயல்படும் விடுவிப்பு அலகுகள் (Hydrostatic Release Units) உட்பட, பொருத்தப்பட்டிருக்க வேண்டும். இதனால் கலன் மூழ்கும்போது மிதவைப் படகுகள் தானாக விடுபட்டு, தானாகவே காற்று நிரம்பும்.

(2) 12 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடையதும், 17 மீட்டருக்குக் குறைவான நீளமுடையதுமான மீன்பிடிக் கலன்களில், பின்வரும் நிபந்தனைகளைப்

பூர்த்தி செய்யும் மிதக்கும் உயிர்காப்பு உபகரணங்கள் (Buoyant Apparatus) இருக்க வேண்டும்: —

(a) கலனில் உள்ள நபர்களின் மொத்த எண்ணிக்கைக்குக் குறையாமல் தங்க வைக்கும் போதுமான எண்ணிக்கையிலும் கொள்ளளவிலும் அவை இருக்க வேண்டும்; மற்றும்

(b) கலன் நாட்டின் பிராந்தியக் கடல் எல்லைக்கு வெளியே செயல்படும்போது, கலனில் உள்ள அனைவருக்கும் போதுமான இருக்கை வசதியளிக்கும் கொள்ளளவுடைய மிதவைப் படகுகளையும் கூடுதலாக எடுத்துச் செல்ல வேண்டும்;

(c) மிதவைப் படகுகள் SOLAS தரநிலைகளின்படி கட்டமைக்கப்பட்டு, SOLAS Pack "B" உடன் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(3) 7 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடையதும், 12 மீட்டருக்குக் குறைவான நீளமுடையதுமான மீன்பிடிக் கலன்கள், உள்ளமைக்கப்பட்ட மிதவைத் தன்மை (Built-in Buoyancy) தேவைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால், குறைந்தபட்சம் ஒரு மிதக்கும் உயிர்காப்பு உபகரணத்தையாவது எடுத்துச் செல்ல வேண்டும். இருப்பினும், கலனின் உத்தேசிக்கப்பட்ட செயல்பாட்டுப் பகுதி மற்றும் செயல்பாட்டின் தன்மைக்கு நடைமுறையில் சாத்தியமான இடங்களில், SOLAS தரநிலைகளின்படி கட்டமைக்கப்பட்ட திறந்த, இருபுறமும் பயன்படுத்தக்கூடிய மிதவைப் படகுகளை எடுத்துச் செல்லலாம்.

(4) திறந்த, இருபுறமும் பயன்படுத்தக்கூடிய மிதவைப் படகுகளைத் தவிர, பிற மிதவைப் படகுகள், நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சேவை நிலையத்தில், 12 மாதங்களுக்கு மிகாத இடைவெளியில் பராமரிப்புச் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஒருமுறை பயன்படுத்திவிட்டு அகற்றும் வகையைச் சாராத நீர்நிலை அழுத்தத்தால் செயல்படும் விடுவிப்பு அலகுகள், அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் ஆண்டுதோறும் ஆய்வு செய்யப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

(5) பல உடற்பகுதிகளைக் கொண்ட (Multihull) மீன்பிடிக் கலனில் எடுத்துச் செல்லப்படும் மிதவைப் படகுகள், அவற்றை எளிதில் அணுகவும், நீரில் இறக்கவும் இயலும் வகையில் வைக்கப்பட வேண்டும்.

(6) ஒவ்வொரு மீன்பிடிக் கலனிலும், அந்தக் கலன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கைக்குக் குறையாத எண்ணிக்கையில், SOLAS தரநிலைகளுக்கு இணங்கிய உயிர்காப்பு அங்கிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(7) உயிர்காப்பு அங்கிகள் நல்ல செயல்பாட்டு நிலையில் பராமரிக்கப்படுவதுடன், எல்லா நேரங்களிலும் எளிதில் அணுகக்கூடிய வகையில் இருக்க வேண்டும். தங்குமிடப் பகுதிகளிலோ அல்லது கூட்டுமிடங்களுக்கு அருகிலுள்ள பொருத்தமான இடங்களிலோ தெளிவாகக் குறிக்கப்பட்ட இடங்களில் அவை வைக்கப்பட வேண்டும்.

(8) அட்டவணை I-இன் அட்டவணை I-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஒவ்வொரு மீன்பிடிக் கலனிலும் SOLAS தரநிலைகளுக்கு இணங்கிய உயிர்காப்பு வளையங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(9) 17 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடைய மீன்பிடிக் கலன்களில், கயிறு இணைக்கப்பட்ட குறைந்தபட்சம் ஒரு உயிர்காப்பு வளையம் கலனின் ஒவ்வொரு பக்கத்திலும் கிடைக்கும் வகையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(10) ஒவ்வொரு உயிர்காப்பு வளையத்திலும் கலனின் பெயரும் பதிவு செய்யப்பட்ட துறைமுகத்தின் பெயரும் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(11) அட்டவணை I-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஒவ்வொரு மீன்பிடிக் கலனிலும் அங்கீகரிக்கப்பட்ட வகையிலான தீப்பொறி/ஒளிச் சமிக்ஞைச் சாதனங்களும் பிற அவசர உதவிச் சமிக்ஞைகளும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

23. தீயணைப்பு உபகரணங்கள் (FIRE FIGHTING APPLIANCES). -

(1) அட்டவணை I-இன் அட்டவணை I-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஒவ்வொரு மீன்பிடிக் கலனிலும் திறம்படச் செயல்படும் தீயணைப்பு உபகரணங்கள் இருக்க வேண்டும். அவை அசல் உபகரண உற்பத்தியாளர் (OEM) பரிந்துரைக்கும் இடைவெளிகளில் பராமரிக்கப்பட வேண்டும்.

(2) 24 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடைய மீன்பிடிக் கலன்களில் பின்வருவன பொருத்தப்பட்டிருக்க வேண்டும்: —

(a) இயந்திர அறைக்கு வெளியே அமைக்கப்பட்ட, $Q=[0.15\{L(B+D)\}^{1/2} + 2.25]^2$ m^3/h அல்லது 180 m^3/h ஆகியவற்றில் குறைவான கொள்ளளவு கொண்ட இயந்திர இயக்கத் தீயணைப்பு நீரேற்றுப் பம்பு ஒன்று. கலனின் எந்தப் பகுதியையும் நோக்கி நீர்த்தாரையைச் செலுத்தக்கூடிய போதிய நீளமுள்ள குழாயும் பொருத்தமான முனையும் அதனுடன் இருக்க வேண்டும்;

(b) அனைத்து வகையான தீயையும் அணைக்கப் பயன்படும் அங்கீகரிக்கப்பட்ட தரநிலையிலான எடுத்துச் செல்லக்கூடிய தீயணைப்பான் ஒன்று, சமையலறை நுழைவிடம், ஒவ்வொரு தங்குமிடப் பகுதியின் நுழைவிடம் மற்றும் இயந்திர அறை நுழைவிடம் ஆகிய இடங்களில் வைக்கப்பட வேண்டும் (மொத்தம் குறைந்தபட்சம் மூன்று).

(3) 12 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்டதும் 24 மீட்டருக்குக் குறைவான நீளமுடையதுமான மீன்பிடிக் கலன்களில் பின்வருவன இருக்க வேண்டும்: —

(a) அனைத்து வகையான தீயையும் அணைக்கப் பயன்படும் அங்கீகரிக்கப்பட்ட தரநிலையிலான எடுத்துச் செல்லக்கூடிய தீயணைப்பான், ஒவ்வொரு தங்குமிடப் பகுதியின் நுழைவிடத்திலும் இயந்திர அறை நுழைவிடத்திலும் வைக்கப்பட வேண்டும் (குறைந்தபட்சம் இரண்டு);

(b) கயிறு இணைக்கப்பட்ட இரண்டு தீயணைப்பு வாளிகள்.

(4) 12 மீட்டருக்குக் குறைவான நீளமுடைய தளமுள்ள கலன்களில் அனைத்து வகையான தீயையும் அணைக்கப் பயன்படும் அங்கீகரிக்கப்பட்ட எடுத்துச் செல்லக்கூடிய தீயணைப்பான்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். அவற்றில் ஒன்று இயந்திர அறை நுழைவிடத்தில் வைக்கப்பட வேண்டும்:—

(a) உள்புற இயந்திரம் கொண்ட கலன்களில் இரண்டு எடுத்துச் செல்லக்கூடிய தீயணைப்பான்களும் கயிறு இணைக்கப்பட்ட ஒரு தீயணைப்பு வாளியும் இருக்க வேண்டும்;

(b) வெளிப்புற இயந்திரம் கொண்ட கலன்களில் ஒரு எடுத்துச் செல்லக்கூடிய தீயணைப்பானும் கயிறு இணைக்கப்பட்ட ஒரு தீயணைப்பு வாளியும் இருக்க வேண்டும்.

(5) 12 மீட்டருக்குக் குறைவான நீளமுடைய தளமற்ற கலன்களில் அட்டவணை I-இன் அட்டவணை II-ல் குறிப்பிடப்பட்டுள்ள தீயணைப்பு உபகரணங்கள் இருக்க வேண்டும். உள்புற இயந்திரம் கொண்ட கலன்களில் உள்ள எடுத்துச் செல்லக்கூடிய தீயணைப்பான் பொருத்தமான வகை மற்றும் அளவுடையதாகவும் இயந்திர அறைக்கு அருகிலும் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(6) 24 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடையதும் குறைந்தபட்சம் 100 hp திறனுடைய இயந்திரம் பொருத்தப்பட்டதுமான மீன்பிடிக் கலன்களில், பாதுகாக்கப்பட வேண்டிய இடத்திற்குப் பொருத்தமான நிலையான தீயணைப்பு அமைப்பு இயந்திர அறையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும். அது உற்பத்தியாளரின் தேவைகளுக்கு ஏற்ப நிறுவப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

(7) 24 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடைய மீன்பிடிக் கலன்களில், தீ அல்லது புகையைக் கண்டறிந்து, தீயைக் குறிக்காத பிற அமைப்புகளின் எச்சரிக்கை ஒலிகளிலிருந்து வேறுபட்ட கேட்கக்கூடிய எச்சரிக்கை ஒலியைத் தொடங்கக்கூடிய தீ/புகை கண்டறிதல் அமைப்பு, கலனின் அனைத்துப் பகுதிகளிலும் எச்சரிக்கை ஒலி கேட்கும் வகையில் போதிய இடங்களில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

24. வானொலி உபகரணங்கள் (RADIO EQUIPMENT). -

(1) மீன்பிடிக் கலன்களில் வழங்கப்படும் வானொலி உபகரணங்கள், சர்வதேச கடல்சார் அமைப்பு (IMO) நிர்ணயித்த செயல்திறன் தரநிலைகளின்படியோ அல்லது அதற்கு இணையான தேசிய தரநிலைகளின்படியோ அங்கீகரிக்கப்பட்ட வகையைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும்.

(2) எடுத்துச் செல்ல வேண்டிய குறைந்தபட்ச வானொலி உபகரணங்களின் எண்ணிக்கை அட்டவணை I-இன் அட்டவணை III-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(3) 7 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்டதும் 12 மீட்டருக்குக் குறைவான நீளமுடையதுமான மீன்பிடிக் கலனில் எடுத்துச் செல்லக்கூடிய விப் ஆண்டெனா ஒன்று இருக்க வேண்டும்.

(4) அனைத்து மீன்பிடிக் கலன்களிலும் ஒரு டிரான்ஸ்பாண்டர் எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

(5) 7 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடைய மீன்பிடிக் கலன்களில் 406 MHz அல்லது Inmarsat EPIRB ஒன்று வழங்கப்பட்டிருக்க வேண்டும். அது எளிதில் அணுகக்கூடிய இடத்தில் நிறுவப்பட்டு, கையால் விடுவிக்கத் தயாராகவும், உயிர்காப்புப் படகில் எடுத்துச் செல்லக்கூடியதாகவும், கலன் மூழ்கும்போது தானாக மிதந்து வெளிவந்து தானாகச் செயல்படக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

(6) EPIRB-கள் நிர்வாகத்திடம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும், உற்பத்தியாளரின் பரிந்துரைகள் அல்லது நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பராமரிக்கப்பட வேண்டும்.

(7) 7 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடைய மீன்பிடிக் கலன்களில் SART அல்லது AIS SART ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(8) வானொலி உபகரணங்களுக்கான மின்சார வழங்கலுக்கு மின்கலங்கள் பயன்படுத்தப்பட்டால், கப்பலிலேயே மின்கலங்களை மின்னேற்றும் வசதிகளோ அல்லது மாற்று மின்கலத் தொகுப்போ வழங்கப்பட வேண்டும். 7 மீட்டருக்குக் குறைவான நீளமுடைய கலன்களுக்கு ஒரு மணி நேரமாக இருக்கலாம்; மற்ற கலன்களுக்கு குறைந்தபட்சம் மூன்று மணி நேரத்திற்குப் போதுமான மின்கலத் திறன் இருக்க வேண்டும்.

(9) நிலையான வானொலி நிறுவல்கள், கலனின் அழைப்புக் குறியீடு (Call Sign), MMSI எண் அல்லது வானொலிப் பயன்பாட்டிற்குப் பொருந்துமிடத்தில் பிற குறியீடுகளுடன் தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு நிறுவலிலும் வானொலி அவசரநிலை, அவசர முன்னுரிமை மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளின் தெளிவான சுருக்கத்தைக் கொண்ட அட்டைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(10) கலனில் உள்ள அனைத்து கையடக்க VHF வானொலிகளுக்கும் சுருக்கமானதும் தெளிவானதுமான இயக்க வழிமுறைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

25. வழிசெலுத்தல் உபகரணங்கள் (NAVIGATIONAL EQUIPMENT). -

(1) மீன்பிடிக் கலன்களில் வழங்கப்படும் அனைத்து வழிசெலுத்தல் உபகரணங்களும், சர்வதேச கடல்சார் அமைப்பு (IMO) நிர்ணயித்த செயல்திறன் தரநிலைகளின்படியோ அல்லது அதற்கு இணையான தேசிய தரநிலைகளின்படியோ இருக்க வேண்டும்.

(2) 12 மீட்டருக்குக் குறைவான நீளமுடையதும் நிலப்பரப்பிலிருந்து கண்களுக்குப் புலப்படும் தொலைவிற்கு அப்பால் இயங்குவதுமான மீன்பிடிக் கலன்களில் திறம்படச் செயல்படும் கையடக்கத் திசைகாட்டி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) 12 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடைய மீன்பிடிக் கலன்களில் சரியாகச் சீரமைக்கப்பட்ட காந்தத் திசைகாட்டி அல்லது கலனின் பிரதான மின்சார

வழங்கலைச் சாராத வேறு வழிமுறை பொருத்தப்பட்டிருக்க வேண்டும். இதன் மூலம் கலனின் திசையை அறிந்து, அதன் அளவீட்டை பிரதான திசைமாற்றும் இடத்தில் காண்பிக்க இயல வேண்டும். திசைகாட்டிக்கான விளக்கும் வழங்கப்பட வேண்டும்.

(4) அனைத்து காந்தத் திசைகாட்டிகளுக்கும், காந்தத் திசை மற்றும் திசைத் தாங்கல்களை உண்மையான திசையாகத் திருத்திக் கணக்கிடுவதற்கான வசதி இருக்க வேண்டும்.

(5) 12 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடைய அனைத்து மீன்பிடிக் கலன்களிலும், மேலும் 12 மீட்டருக்குக் குறைவான நீளமுடைய தளமுள்ள மீன்பிடிக் கலன்களிலும், நீரின் ஆழத்தை அளவிடுவதற்கான எக்கோ சவுண்டர்/மீன் கண்டறியும் கருவி பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(b) மற்றொரு பிரதியானது மீனவருக்கு எவ்விதக் கட்டணமும் இன்றி வழங்கப்பட வேண்டும்.

(6) பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால், எந்தவொரு மீன்பிடிக் கப்பலும் கடலுக்குச் செல்லக் கூடாது:

(a) கப்பலில் உள்ள அனைத்து நபர்களும் இவ்விதியின்படி முறையாகச் செயல்படுத்தப்பட்ட செல்லுபடியாகும் ஒப்பந்தங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

(b) இவ்விதிகளின்படி பராமரிக்கப்பட வேண்டிய பணியாளர் விவர அறிக்கையில் (Crew Statement), ஒவ்வொரு ஒப்பந்தம் தொடர்பான விவரங்களும் இடம்பெற்றிருக்க வேண்டும்.

(7) ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும். அதில் ஒப்பந்தத்தின் இரு தரப்பினரும் கையொப்பமிடுவதுடன், கப்பலின் தலைவரும் அதனை எதிரொப்பமிட வேண்டும்.

(8) பொருந்தக்கூடிய சட்டத்தின்படி அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், மீனவர் ஒருவர் வயது குறைந்தவராக (Minor) இருந்தால், அவரது பெற்றோர் அல்லது சட்டப்பூர்வப் பாதுகாவலரின் ஒப்புதலும் அந்த ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

(9) வயது குறைந்தவர்களைப் பணியமர்த்துவது அனுமதிக்கப்பட்டிருந்தால், அது குழந்தைத் தொழிலாளர் சட்டங்கள் மற்றும் பொருந்தக்கூடிய மாநில மீன்வளச் சட்டங்களுக்கு முற்றிலும் இணங்க இருக்க வேண்டும். அவற்றை மீறினால், இவ்விதிகளின் கீழ் அக்கப்பலின் சான்றளிப்பு இடைநிறுத்தப்படுவதற்கான நடவடிக்கைக்கு அந்தக் கப்பல் உட்படுத்தப்படும்.

65. பணியாளர் விவர அறிக்கையைப் பராமரித்தல் (CREW STATEMENT TO BE MAINTAINED). —

(1) இப்பகுதி பொருந்தும் ஒவ்வொரு கப்பலின் உரிமையாளர் அல்லது தலைவரும், அக்கப்பலில் உள்ள ஒவ்வொரு நபரின் விவரங்களையும் நப்மித்ரா (Nabhmitra) இணையதளத்தில் அறிவிக்க வேண்டும்.

(2) வணிகக் கப்பல் போக்குவரத்துச் சட்டம், 2025 (2025-ஆம் ஆண்டின் 24-ஆம் சட்டம்), பிரிவு 275-இன் துணைப் பிரிவு (1)-இன் கீழ் வழங்கப்பட வேண்டிய விவரங்களுடன் கூடுதலாக, பணியாளர் விவர அறிக்கையில் ஒவ்வொரு நபர் தொடர்பாகவும் பின்வரும் விவரங்கள் இடம்பெற்றிருக்க வேண்டும்:

(a) பிறந்த தேதி, வயது மற்றும் பாலினம்.

(b) முகவரி மற்றும் குடியுரிமை.

(c) மீனவர் அடையாள அட்டை உள்ளிட்ட அடையாள விவரங்கள்.

(d) அவர் பணியமர்த்தப்பட்டுள்ள பொறுப்பு அல்லது பதவி.

(e) ஏதேனும் இருந்தால், அவர் பெற்றுள்ள திறன் சான்றிதழ் (Certificate of Competency) அல்லது திறன் தேர்ச்சிச் சான்றிதழ் (Certificate of Proficiency) தொடர்பான விவரங்கள்.

(f) கப்பலில் பணியில் சேர்ந்த தேதி மற்றும் இடம்.

(g) பணியமர்த்தப்பட்ட நபரின் கையொப்பம் அல்லது பெருவிரல் ரேகை.

(3) பயணத்தின்போது பணியாளர் விவர அறிக்கையில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அந்த மாற்றம் உடனடியாகப் பதிவு செய்யப்பட வேண்டும். அப்போது கப்பலின் தேதி மற்றும் இருப்பிடமும் குறிப்பிடப்பட வேண்டும். அல்லது அவ்வாறு பதிவு செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்போது பதிவு செய்யப்பட வேண்டும்.

(4) முழுமையான பணியாளர் விவரங்கள் நப்மித்ரா செயலியில் (NabhMitra App) பதிவேற்றப்பட்டுள்ளன என்பதை உரிய அலுவலர் உறுதிசெய்யும் வரை, எந்தவொரு கப்பலும் கடலுக்குச் செல்லக் கூடாது.

(5) தவறான, முழுமையற்ற அல்லது புதுப்பிக்கப்படாத பணியாளர் விவர அறிக்கையானது இவ்விதிகளை மீறிய செயலாகக் கருதப்படும். மேலும், இச்சட்டத்தின் பிரிவு 281-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள தண்டனை நடவடிக்கைகளுக்கும் அது உட்பட்டதாகும்.

66. விலக்கு (EXEMPTION). —

(1) இவ்விதிகளின் எந்தவொரு விதிமுறையிலிருந்தும், ஏதேனும் ஒரு மீன்பிடிக் கப்பலுக்கோ அல்லது மீன்பிடிக் கப்பல்களின் ஒரு வகைக்கோ விலக்கு அளிப்பது பொருத்தமானது எனத் திருப்தியடைந்தால், மத்திய அரசின் முன் அனுமதியைப்

பெற்று, இந்திய அரசின் மீன்வளத் துறையுடன் கலந்தாலோசித்து, தலைமை இயக்குநர் அத்தகைய விலக்கை வழங்கலாம்.

(a) அத்தகைய விலக்கு வழங்கப்படுவதால் கடலில் மனித உயிர்களின் பாதுகாப்பு, கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அல்லது கப்பலின் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படக்கூடாது; மற்றும்

(b) அதற்குப் பதிலாக, சமமான அளவிலான பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அல்லது கப்பல் பாதுகாப்பை உறுதிசெய்யும் மாற்று ஏற்பாடுகள் அல்லது நடவடிக்கைகளுக்கு அந்தக் கப்பல் உட்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(2) இவ்விதிகளின் கீழ் வழங்கப்படும் எந்தவொரு விலக்கும் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கலாம்:

(a) தலைமை இயக்குநர் அவசியமானவை எனக் கருதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு விலக்கு வழங்கப்படலாம்.

(b) விலக்கு வழங்கப்பட்டதற்கான அடிப்படைக் காரணம் இனி நடைமுறையில் இல்லாதபட்சத்தில், எந்த நேரத்திலும் அந்த விலக்கு மாற்றியமைக்கப்படலாம், இடைநிறுத்தப்படலாம் அல்லது ரத்து செய்யப்படலாம்.

(c) விலக்கு எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டு, இந்திய அரசின் மீன்வளத் துறை மற்றும் கப்பலின் உரிமையாளர் அல்லது தலைவருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

(3) இவ்விதியின் கீழ் வழங்கப்படும் விலக்குகள் தொடர்பான விவரங்கள் மீன்பிடிக் கப்பல்களின் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டு, சரிபார்ப்புக்குக் கிடைக்கக்கூடிய வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.

(4) இவ்விதிகளின் கீழ் வழங்கப்படும் எந்தவொரு விலக்கும், பொருந்தக்கூடிய மாநில கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டத்திற்கு (SMFRA) முரணாக மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கும் வகையில் அமையக் கூடாது.

67. கட்டணங்கள் மற்றும் மேல்முறையீடுகள் (FEES AND APPEALS). —

(1) பல்வேறு சேவைகள் மற்றும் துறைசார்ந்த ஆய்வாளர்களுக்கான கட்டணங்கள், அட்டவணை II-இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண விவர அட்டவணையின் படி வசூலிக்கப்பட வேண்டும்.

(2) துறைசாரா அளவையாளர்களால் வழங்கப்படும் சேவைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தால், அவர்களால் வசூலிக்கப்படும் கட்டணங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தலைமை இயக்குநருக்கு இருக்கும்.

(3) இவ்விதிகளின் கீழ் பதிவாளரால் பிறப்பிக்கப்படும் உத்தரவினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும், அவ்வுத்தரவு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் (30 DAYS), சம்பந்தப்பட்ட மாநில கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டத்தில் (SMFRA) பரிந்துரைக்கப்பட்டுள்ள படிவம் மற்றும் நடைமுறையின்படி, மீன்வள ஆணையர் அல்லது மீன்வள இயக்குநரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

68. பதிவு செய்யப்பட்ட துறைமுகம் (PORT OF REGISTRY). —

இந்திய அரசின் மீன்வளத் துறையுடன் கலந்தாலோசித்து, மத்திய அரசு அறிவிக்கை ஒன்றின் மூலம், மீன்பிடிக் கப்பல்களைப் பதிவு செய்வதற்கான

துறைமுகங்களாக அல்லது பதிவு இடங்களாக இந்தியாவில் உள்ள எந்தவொரு துறைமுகத்தையோ அல்லது இடத்தையோ அறிவிக்கலாம்.

69. பருவகால மீன்பிடித் தடைகள் (SEASONAL FISHING BANS). —

(1) பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ், மத்திய அரசு அல்லது மாநில அரசு அறிவிக்கும் பருவகால மீன்பிடித் தடை அமலில் இருக்கும் காலங்களில், இவ்விதிகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு சான்றிதழும் செல்லுபடியாக இருந்தாலும், எந்தவொரு மீன்பிடிக் கப்பலும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

(2) துணை விதி (1)-ஐ மீறுவது, பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு கூடுதலாக, இவ்விதிகளின் கீழான விதிமீறலாகவும் கருதப்படும்.

70. தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் (PROHIBITED FISHING GEAR). —

பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துதல், கப்பலில் எடுத்துச் செல்லுதல் அல்லது கடலில் பயன்படுத்துவதற்காகப் பொருத்துதல் ஆகியவை, இவ்விதிகளின் கீழ் ஆய்வு, சான்றளித்தல் மற்றும் அமலாக்க நடவடிக்கைகளுக்கான விதிமீறலாகக் கருதப்படும்.

அட்டவணை – I (SCHEDULE I)

[விதிகள் 22 முதல் 25 வரை காண்க]

அட்டவணை I – உயிர் பாதுகாப்பு உபகரணங்களுக்கான (LSA) குறைந்தபட்சத் தேவைகள்

கப்பலின் நீளம்	**24 மீட்டருக்கு மேல் மற்றும் 45 மீட்டருக்குக் கீழ்**	**17 மீட்டருக்கு மேல் மற்றும் 24 மீட்டருக்குக் கீழ்**	**12 மீட்டருக்கு மேல் மற்றும் 17 மீட்டருக்குக் கீழ்**	**7 மீட்டருக்கு மேல் மற்றும் 12 மீட்டருக்குக் கீழ்**	**7 மீட்டருக்குக் கீழ்**
உயிர்காப்புத் தெப்பம் (Life Raft)	1*	1	1*	–	–
மிதவை உபகரணம் (Buoyant Apparatus)	–	–	1	1@	–
உயிர்காப்பு மேலங்கி (Life Jacket)	100%	100%	100%	100%	100%
விளக்குடன் கூடிய உயிர்காப்பு வளையம் (Life Buoy with Light)	2	1	1	–	–
கயிறுடன் கூடிய உயிர்காப்பு வளையம் (Life Buoy with Line)	2@@	2@@	1	1	–
பாராசூட் ராக்கெட் (Rocket Parachute)	4**	2**	1**	–	–
கையில் பிடித்து பயன்படுத்தும் சிவப்பு எரிகுண்டுகள் (Hand-held Red Flares)	2*	1*	1*	1*	–
ஆரஞ்சு நிறப் புகைச் சமிக்ஞைகள் (Orange Smoke Signals)	1*	1*	1*	1**	–
கருப்பு நிறச் சதுரம் மற்றும் வட்டம் கொண்ட ஆரஞ்சு நிறத் துணி (Orange Canvas with Black Square and Circle)	1	1	1	1	–
சாயக் குறியீடு (Dye Marker)	1	1	–	–	–
பந்து பொருத்தப்பட்ட சதுரக் கொடி (Square Flag with Ball)	1	1	1	–	–
சிவப்புத் துணி அல்லது விரிப்பு (Red Cloth or Sheet)	1	1	1	1	1
விசில் (Whistle)	–	–	–	1	1
கண்ணாடி (Mirror)	–	–	–	1	1
மின்விளக்கு (Torch)	–	–	–	1	1

குறிப்புகள்:

* கடல் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பிற்கு அப்பால் இயக்கப்படும் கப்பல்களுக்கு கூடுதலாக 100% உபகரணங்கள் தேவை.

** கடல் எல்லைக்குட்பட்ட நீர்ப்பரப்பிற்கு அப்பால் இயக்கப்படும் கப்பல்களுக்கு கூடுதலாகத் தேவை.

@ கப்பலில் உள்ளமைக்கப்பட்ட மிதவைத் தன்மை (Built-in Buoyancy) தேவைகளைப் பூர்த்தி செய்யாத பட்சத்தில்.

@@ கப்பலின் ஒவ்வொரு பக்கத்திலும்.

அட்டவணை II – தீயணைப்பு உபகரணங்களுக்கான (FFA) குறைந்தபட்சத் தேவைகள்

உபகரணத்தின் பெயர்	24–45 மீ.	12–24 மீ.	12 மீட்டருக்குக் கீழ் – மூடிய மேல் தளமுள்ள கப்பல் (Decked) – உள்ளே	12 மீட்டருக்குக் கீழ் – மூடிய மேல் தளமுள்ள கப்பல் – வெளியே	12 மீட்டருக்குக் கீழ் – திறந்த மேல் தளமுள்ள கப்பல் (Undecked) – உள்ளே	12 மீட்டருக்குக் கீழ் – திறந்த மேல் தளமுள்ள கப்பல் – வெளியே	இயந்திர மில்லாத கப்பல்
தீயணைப்பு பம்ப் (Fire Pump)	1*	1**	–	–	–	–	–
எடுத்துச் செல்லக்கூடிய தீயணைப்புக் கருவி (Portable Fire Extinguisher)	3@	2	2	1	1	–	–
தீ/புகை கண்டறியும் மற்றும் எச்சரிக்கை அமைப்பு (Fire/Smoke Detection/Alarm System)	1	–	–	–	–	–	–
நிலையான தீயணைப்பு அமைப்பு (Fixed Firefighting System)	1 (>1000 HP)	–	–	–	–	–	–
கயிறு பொருத்தப்பட்ட தீயணைப்பு வாளிகள் (Fire Buckets with Lanyard)	–	1	1	1	1	1	–
நீர் இறைக்கும் பாத்திரம் (Bailer)	–	–	–	–	–	–	1

குறிப்புகள்:

* இயந்திர அறைக்கு வெளியே அமைக்கப்பட வேண்டும்.

** பதிவாளரால் எடுத்துச் செல்லக்கூடிய தீயணைப்பு பம்ப் அனுமதிக்கப்படலாம்.

@ சமையலறை மற்றும் இயந்திர அறை தவிர்ந்த இதர இடங்களுக்குக் கூடுதல் தீயணைப்புக் கருவிகள் வழங்கப்படலாம்.

அட்டவணை III – வானொலி தொடர்பு உபகரணங்களுக்கான (RADIO) குறைந்தபட்சத் தேவைகள்

கப்பலின் நீளம்	24–45 மீ.	12–24 மீ.	7–12 மீ.	7 மீட்டருக்குக் கீழ்
கையில் எடுத்துச் செல்லக்கூடிய நீண்ட கம்பி ஆன்டெனா (Portable Whip Antenna)	–	–	1	–
EPIRB (406 MHz/Inmarsat)	1	1	1	–
SART / AIS SART	1	1	1	–
மின்கலத் திறன் (மணி நேரம்)	3	3	3	1
DSC வசதியுடன் கூடிய VHF வானொலி	1	1	–	–
கையில் எடுத்துச் செல்லக்கூடிய VHF வானொலி	2	1	1	1
INMARSAT SES அல்லது DSC வசதியுடன் கூடிய MF / HF வானொலி	1*	1*	1*	–
டிரான்ஸ்பாண்டர் (Transponder) @	1	1	1	1

குறிப்புகள்:

உயர்கடல் பகுதிகளில் (High Seas) இயக்கப்படும் மீன்பிடிக் கப்பல்கள், GMDSS தேவைகளுக்கு இணங்க இருக்க வேண்டும்.

* 24 கடல் மைல்களுக்கு அப்பால் இயக்கப்படும் கப்பல்களுக்குப் பொருந்தும்.
@ கப்பலின் நீளம் எதுவாக இருந்தாலும், அனைத்து மீன்பிடிக் கப்பல்களுக்கும் டிரான்ஸ்பாண்டர் கட்டாயமாகும்.

அட்டவணை IV – வழிசெலுத்தல் உபகரணங்களுக்கான (Navigational Equipment) குறைந்தபட்சத் தேவைகள்

உபகரணத்தின் பெயர்	24–45 மீ.	12–24 மீ.	12 மீட்டருக்குக் கீழ் – பார்வைக்குட்பட்ட வரம்பிற்கு அப்பால்	12 மீட்டருக்குக் கீழ் – பார்வைக்குட்பட்ட வரம்பிற்குள்
கையில் எடுத்துச் செல்லக்கூடிய திசைகாட்டி (Handheld Bearing Compass)	–	–	1	–
சரிசெய்யப்பட்ட காந்தத் திசைகாட்டி அல்லது இதர வழிசெலுத்தும் சாதனம் (Adjusted Magnetic Compass/Other Means)	1@*	1*	–	–
எதிரொலி ஆழமானி / மீன் கண்டறியும் கருவி (Echo Sounder/Fish Finder)	1	1	1**	1**
GPS	1	1	–	–
X-பேண்ட் ரேடார் (X-band Radar)	1@@	–	–	–
ரேடார் பிரதிபலிப்பான் (Radar Reflector)	1	1	1	1
கடல் வரைபடங்கள் மற்றும் வெளியீடுகள் / ECDIS#	1	1	1	1
வழிசெலுத்தல் விளக்குகள் மற்றும் குறியீட்டு வடிவங்கள் (Navigation Lights and Shapes)	1	1	1	1
மருத்துவப் பெட்டி (Medical Kit)	1	–	–	–
முதலுதவிப் பெட்டி (First Aid Kit)	–	1	1	1

குறிப்புகள்:

@ கப்பலின் நீளம் 35 மீட்டருக்கு மேல் இருந்தால், மாற்றிப் பயன்படுத்தக்கூடிய ஒரு கூடுதல் திசைகாட்டியும் தேவை.

* 12 கடல் மைல்களுக்குள் இயக்கப்பட்டால், திசைதிருப்பும் திசைகாட்டியை (Steering Compass) பயன்படுத்தலாம்.

** மூடிய மேல் தளமுள்ள கப்பல்களுக்கு.

@@ கப்பலின் நீளம் 35 மீட்டருக்கு மேல் இருந்தால்.

12 கடல் மைல்களுக்கு அப்பால் இயக்கப்பட்டால்.

FVR படிவம் I

உரிமை அறிவிப்பு

(தனிநபர்கள் / கூட்டுரிமையாளர்கள் / கூட்டாண்மை நிறுவனங்கள் மூலம்)

[விதி 4-இன் துணை விதி (3)-ஐக் காண்க]

நான் / நாங்கள், கீழே கையொப்பமிட்டவர் / கையொப்பமிட்டவர்கள், இந்தியக் குடிமகன் / குடிமக்கள் ஆவோம் என்றும், நிரந்தரமாக வசிக்கும் இடம் / முதன்மை வணிக நடவடிக்கைகள் நடைபெறும் இடம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ளது என்றும் இதன்மூலம் அறிவிக்கிறேன் / அறிவிக்கிறோம்: _____ கீழே விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள, தற்காலிகமாக / முன்னர் _____ என்று அழைக்கப்பட்ட மீன்பிடிக் கப்பலானது, _____ என்ற இடத்தில், ... ஆம் ஆண்டில் கட்டப்பட்டது / ரூ. _____ தொகைக்கு என்னால் / எங்களால் வாங்கப்பட்டது / என்னால் / எங்களால் கணிசமான அளவில் மாற்றியமைக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்டது / ..... என்பவரிடமிருந்து எனக்கு / எங்களுக்கு வாரிசுரிமையாகக் கிடைத்தது. மேற்குறிப்பிட்ட நபரின் பெயர், சம்பந்தப்பட்ட மீன்பிடிக் கப்பலின் உரிமையாளராகப் பதிவேட்டில் இடம்பெற்றுள்ளது. அவர் ..... என்ற இடத்தில், _____ அன்று காலமானார். மேலும், மேற்குறிப்பிட்ட மீன்பிடிக் கப்பலின் ஒரே உரிமையாளர் / உரிமையாளர்கள் நான்/நாங்கள் மட்டுமே ஆவோம் என்றும், அக்கப்பலில் அல்லது அக்கப்பல் தொடர்பாக வேறு எந்தவொரு நபருக்கும் சட்டப்பூர்வமான அல்லது பயனுரிமை அடிப்படையிலான எந்தவொரு உரிமையோ, உரிமைத் தலைப்போ அல்லது சொத்துப் பங்கோ இல்லை என்றும் இதன்மூலம் அறிவிக்கிறேன்/அறிவிக்கிறோம். மேற்கண்ட அறிவிப்பு உண்மையானது என மனப்பூர்வமாக நம்பி, இந்த உறுதிமொழி அறிவிப்பைச் செய்கிறேன்/செய்கிறோம்.

மீன்பிடிக் கப்பலின் விவரங்கள்

அதிகாரப்பூர்வ எண், பதிவு செய்யப்பட்ட தேதி மற்றும் பதிவு துறைமுகம்: .....

பதிவு செய்யப்பட்ட பரிமாணங்கள்:

நீளம்: ..... அகலம்: .....

ஆழம்: ..... மொத்த டன் அளவு (Gross Tonnage): .....

பதிவு செய்யப்பட்ட டன் அளவு (Registered Tonnage): ..... கன மீட்டர்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்/கையொப்பங்கள்

எனது முன்னிலையில் ..... என்ற இடத்தில், 20..... ஆம் ஆண்டு ..... மாதம் ..... தேதியன்று அறிவிக்கப்பட்டது.

அலுவலக முத்திரை

வழங்கிய அதிகாரியின் கையொப்பம் மற்றும் பதிவாளரின் பதவிப் பெயர்

FVR படிவம் II

உரிமை அறிவிப்பு (நிறுவனத்தின் மூலம்)

[விதி 4-இன் துணை விதி (3)-ஐக் காண்க]

நான், கீழே கையொப்பமிட்டவர், ... என்ற முகவரியில் நிரந்தரமாக வசிப்பவரும், ... நிறுவனத்தின் முறையாக அங்கீகரிக்கப்பட்ட முகவர் / முறையாக நியமிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ பிரதிநிதியுமாவேன். இதன்மூலம் பின்வருவனவற்றை அறிவிக்கிறேன்:

மேற்குறிப்பிட்ட நிறுவனம், நிறுவனங்கள் சட்டம், 2013-இன் கீழ், ... அன்று பதிவு செய்யப்பட்டது. மேலும், அதன் முதன்மை வணிக நடவடிக்கைகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படும் அதன் முதன்மை வணிக அலுவலகம் ..... என்ற முகவரியில் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட நிறுவனம், வணிகக் கப்பல் போக்குவரத்துச் சட்டம், 2025-இன் பிரிவு 15-இன் கூறு (b)-இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. மேலும், கீழே விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள, தற்காலிகமாக / முன்னர் ..... என்று அழைக்கப்பட்ட மீன்பிடிக் கப்பலின் ஒரே உரிமையாளர் மேற்குறிப்பிட்ட நிறுவனமே ஆகும். அந்த மீன்பிடிக் கப்பலானது, ... ஆம் ஆண்டில் ..... என்ற இடத்தில் கட்டப்பட்டது மற்றும் / அல்லது ரூ. ..... தொகைக்கு மேற்குறிப்பிட்ட நிறுவனத்தால் வாங்கப்பட்டது / மேற்குறிப்பிட்ட நிறுவனத்தால் கணிசமான அளவில் மாற்றியமைக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்டது.

எனக்குத் தெரிந்த வரையிலும், எனது நம்பிக்கையின்படியும், மேற்குறிப்பிட்ட மீன்பிடிக் கப்பலில் அல்லது அக்கப்பல் தொடர்பாக வேறு எந்தவொரு நபருக்கும் சட்டப்பூர்வமான அல்லது பயனுரிமை அடிப்படையிலான எந்தவொரு உரிமையோ, உரிமைத் தலைப்போ அல்லது சொத்துப் பங்கோ இல்லை.

மேற்கண்ட அறிவிப்பு உண்மையானது என மனப்பூர்வமாக நம்பி, இந்த உறுதிமொழி அறிவிப்பைச் செய்கிறேன்.

மீன்பிடிக் கப்பலின் விவரங்கள்

அதிகாரப்பூர்வ எண், பதிவு செய்யப்பட்ட தேதி மற்றும் பதிவு துறைமுகம்: .....

பதிவு செய்யப்பட்ட பரிமாணங்கள்:

நீளம்: ..... அகலம்: .....
ஆழம்: ..... மொத்த டன் அளவு (Gross Tonnage): .....
பதிவு செய்யப்பட்ட டன் அளவு (Registered Tonnage): ..... கன மீட்டர்.

நிறுவனத்தின் சார்பாக கையொப்பம்
நிறுவனத்தின் பெயர்: ..... லிமிடெட்

எனது முன்னிலையில் ..... என்ற இடத்தில், 20..... ஆம் ஆண்டு ..... மாதம் ..... தேதியன்று அறிவிக்கப்பட்டது.

அலுவலக முத்திரை **வழங்கிய அதிகாரியின் கையொப்பம் மற்றும்**

பதிவாளரின் பதவிப் பெயர்

[FVR படிவம் III]

மீன்பிடிப் படகின் பதிவு சான்றிதழ்

[விதி 8-ஐக் காண்க]

1. **மீன்பிடிப் படகின் பெயர்: .....**

2. பதிவு எண் மற்றும் தேதி (KL*): .....

3. அழைப்புக் குறியீடு (பொருந்தும் இடங்களில்): .....

4. பதிவு செய்யப்பட்ட துறைமுகம் மற்றும் மாவட்டம்: .....

5. உரிமையாளரின் பெயர்(கள்), நிரந்தர வசிப்பிடம் அல்லது முதன்மை வணிக முகவரி மற்றும் அவரவர் பங்குகள்:

(i) ....

(ii) ....

(iii) ....

6. உரிமையின் வகை (பொருந்துவதை ✓ எனக் குறிக்கவும்):

நிறுவனம் / தனிநபர் / கூட்டுறவுச் சங்கம் / அரசு / அடமானம்.

7. செயல்பாட்டுப் பகுதி: .....

8. மீன்பிடிப் படகு தொடர்பான விவரங்கள்:

(i) கட்டுமானத் தளத்தின் பெயர் மற்றும் முகவரி: .....

(ii) மீன்பிடிப் படகு கட்டப்பட்ட / மறுகட்டுமானம் செய்யப்பட்ட ஆண்டு: .....

(iii) மேலோட்டின் (Hull) கட்டுமானப் பொருள்: மரம் / கண்ணாடி இழை (Fibreglass) / எஃகு / கலப்புப் பொருள்.

(iv) நீளம்: ..... மீட்டர்

(v) அகலம்: ..... மீட்டர்

(vi) ஆழம்: ..... மீட்டர்

(vii) இயந்திர விவரங்கள்:

விவரம்	**தகவல்**
தயாரிப்பு நிறுவனம் (Make)	.....
தயாரிக்கப்பட்ட ஆண்டு	.....
இயந்திர எண்	.....
குதிரைத்திறன் (HP)	.....

தயாரிப்பாளரின் பெயர் மற்றும் முகவரி: .....

உருளைகளின் எண்ணிக்கை மற்றும் விட்டம்: .....

பிஸ்டனின் நகர்வு நீளம் (Length of Stroke): .....

நிமிடத்திற்கு சுழற்சிகள் (RPM) / வேகம்: .....

எரிபொருள் கொள்ளளவு: .....

(viii) படகின் வகை (பொருந்துவதை ✓ எனக் குறிக்கவும்):

இயந்திரம் பொருத்தப்பட்ட இயந்திரப் படகு / இயந்திரம் பொருத்தப்பட்ட இயந்திரமல்லாத படகு / இயந்திரமற்ற படகு.

(ix) பாய்மரங்கள் / குறுக்குத் தடுப்புச் சுவர்கள் (Bulkheads) / சரக்குக் கிடங்குகள் (Holds) ஆகியவற்றின் எண்ணிக்கை: .....

(x) டன்னேஜ் கொள்ளளவு (மொத்த டன்கள்): .....

(xi) மீன்பிடிக் கருவிகள்: .....

9. தகவல் தொடர்பு உபகரணங்கள்:

(i) கடல்சார் மொபைல் நிலைய அடையாள எண் (MMSI), ஒதுக்கப்பட்டிருந்தால்: .....

(ii) தானியங்கி அடையாள அமைப்பு (AIS), பொருத்தப்பட்டிருந்தால், அதன் தயாரிப்பு நிறுவனம் மற்றும் மாதிரி: .....

(iii) அவசரகால இருப்பிடத்தைக் குறிக்கும் வானொலி கலங்கரை விளக்கு (EPIRB), பொருத்தப்பட்டிருந்தால், அதன் தயாரிப்பு நிறுவனம் மற்றும் மாதிரி: .....

(iv) தேடுதல் மற்றும் மீட்பு டிரான்ஸ்பாண்டர் (SART), பொருத்தப்பட்டிருந்தால், அதன் தயாரிப்பு நிறுவனம் மற்றும் மாதிரி: .....

(v) பொருத்தப்பட்டுள்ள பிற தகவல் தொடர்பு உபகரணங்கள்: .....

10. உயிர்காக்கும் உபகரணங்கள்: .....

11. பணியாளர்களின் எண்ணிக்கை: .....

12. செயல்பாட்டுத் தளம்: .....

(*மாநிலத்தில் மோட்டார் வாகனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட முன்னொட்டு எழுத்துக்களைக் குறிப்பிடவும்.)

இடம்: .....

தேதி: .....

பதிவு அதிகாரியின் கையொப்பம் மற்றும் முத்திரை

பதிவுச் சான்றிதழின் நிபந்தனைகள்

1. இந்தப் பதிவுச் சான்றிதழ், திருத்தப்பட்ட வணிகக் கப்பல் போக்குவரத்துச் சட்டம், 2025-இன் விதிகளின்படி வழங்கப்படுகிறது.

2. மீன்பிடிப் படகின் பெயர், இதர அடையாளக் குறியீடுகள், அமைப்பு, வடிவமைப்பு அல்லது படகின் கொள்ளளவு ஆகியவற்றில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமெனில், பதிவு அதிகாரியின் முன் அனுமதி பெற்ற பின்னரே அத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நபரும் கோரும்போது, இந்தச் சான்றிதழ் ஆய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. படகு காணாமல் போனால், உடைக்கப்பட்டால் அல்லது சேவைக்குப் பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டால், இந்தச் சான்றிதழ் மீன்பிடிப் படகின் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

[FVR படிவம் IV]

இந்திய அரசால் வழங்கப்பட்டது

அடமானப் பத்திரம் (INSTRUMENT OF MORTGAGE)

(தனிநபர்கள் / கூட்டுரிமையாளர்கள் / கூட்டாண்மை நிறுவனம் ஆகியோரால் நிறைவேற்றப்பட வேண்டியது)

[விதி 15(1)-ஐக் காண்க]

கீழே கையொப்பமிடும் நான் / நாங்கள், ..., இன்று ..... அவர்களால் எனக்கு / எங்களுக்கு கடனாக வழங்கப்பட்ட ரூபாய் ..... தொகையைப் பெற்றுக்கொண்டதற்கான பிரதிபலனாகவும், நிரந்தரமாக வசிப்பிடமாகக் கொண்டுள்ள / எனது / எங்களது முதன்மை வணிக முகவரியைக் கொண்டுள்ள ..... அவர்களுடன், எனது / எங்களது சார்பாகவும், எனது / எங்களது வாரிசுகள், நிறைவேற்றுநர்கள் அல்லது நிர்வாகிகள் சார்பாகவும் பின்வருமாறு உடன்படிக்கை செய்கிறேன் / செய்கிறோம். முதலாவதாக, மேற்கண்ட ரூபாய் ..... அசல் தொகையுடன், ஆண்டுக்கு ..... சதவீத வட்டியையும் ..... ஆண்டு ..... மாதம் ..... தேதியன்று மேற்கண்ட ..... அவர்களுக்கு நான் / நாங்கள் அல்லது எனது / எங்களது வாரிசுகள், நிறைவேற்றுநர்கள் அல்லது நிர்வாகிகள் செலுத்த வேண்டும். இரண்டாவதாக, மேற்கண்ட நாளில் அசல் தொகை செலுத்தப்படாவிட்டால், அத்தொகை அல்லது அதன் எந்தவொரு பகுதியும் செலுத்தப்படாமல் நிலுவையில் இருக்கும் காலம் முழுவதும், செலுத்தப்படாத முழுத் தொகை அல்லது அதன் நிலுவைப் பகுதியின் மீது ஆண்டுக்கு ..... சதவீத வட்டியை, ஒவ்வொரு ஆண்டும் ..... மற்றும் ..... ஆகிய தேதிகளில் சமமான அரையாண்டுத் தவணைகளாக மேற்கண்ட ..... அவர்களுக்கு நான் / நாங்கள் அல்லது எனது / எங்களது வாரிசுகள், நிறைவேற்றுநர்கள் அல்லது நிர்வாகிகள் செலுத்த வேண்டும். மேற்கண்ட அசல் தொகை மற்றும் வட்டியை இவ்வாறு திருப்பிச் செலுத்துவதை உறுதிசெய்வதற்காக, ... என்ற பெயருடைய மீன்பிடிப் படகை, அதிகாரப்பூர்வ எண் ....., பதிவு செய்யப்பட்ட துறைமுகம் ..... மற்றும் அப்படகுடன் தொடர்புடைய அனைத்து உபகரணங்கள் மற்றும் இணைப்புப் பொருட்கள் உள்ளிட்டவற்றுடன் மேற்கண்ட ..... அவர்களுக்கு நான் / நாங்கள் இதன்மூலம் அடமானம் வைக்கிறேன் / வைக்கிறோம். இறுதியாக, மேற்கண்ட முறையில் மீன்பிடிப் படகை அடமானம் வைப்பதற்கு எனக்கு / எங்களுக்கு அதிகாரம் உள்ளது என்றும், அப்படகு தொடர்பான பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அடமானச் சுமைகளைத் தவிர, வேறு எந்தவிதமான வில்லங்கங்களும் அப்படகின் மீது இல்லை என்றும், நான் / நாங்கள் எனது / எங்களது சார்பாகவும், எனது / எங்களது வாரிசுகள், நிறைவேற்றுநர்கள் அல்லது நிர்வாகிகள் சார்பாகவும் மேற்கண்ட ..... அவர்களுக்கும் அவர்களது உரிமை மாற்றுப் பெறுநர்களுக்கும் உறுதியளிக்கிறேன் / உறுதியளிக்கிறோம்.

மேற்கண்ட நபரால் எனது முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

கையொப்பம்(கள்): .....

கையொப்பம்: .....

பதவி: .....

அலுவலக முத்திரை: .....

மேற்கண்ட எழுத்துப்பூர்வமான அடமானப் பத்திரத்தின் கீழ் வழங்கப்பட்ட பாதுகாப்பு ஆவணத்தின் கடனை முழுமையாகத் தீர்ப்பதற்காக, ரூபாய் ..... தொகையைப் பெற்றுக்கொண்டேன்.

தேதி: .....

எனது முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது. அடமானம் பெறுபவரின் கையொப்பம்(கள்)

அலுவலக முத்திரை: .....

எனது முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

கையொப்பம்: .....

பதவி: .....

இந்திய அரசால் வழங்கப்பட்டது

[FVR படிவம் V]

அடமானப் பத்திரம் (INSTRUMENT OF MORTGAGE)

(ஒரு நிறுவனம் அல்லது கூட்டுரிமையுள்ள சட்ட அமைப்பால் நிறைவேற்றப்பட வேண்டியது)

[விதி 15(1)-ஐக் காண்க]

நாங்கள், ... லிமிடெட் நிறுவனம், எங்களது முதன்மை வணிக முகவரியை ..... என்ற இடத்தில் கொண்டுள்ளோம். இன்று எங்களுக்கு கடனாக வழங்கப்பட்ட ரூபாய் ..... தொகையைப் பெற்றுக்கொண்டதற்கான பிரதிபலனாகவும், எங்களது வாரிசு நிறுவனங்கள் சார்பாகவும், மேற்கண்ட ..... அவர்களுடனும் அவர்களது உரிமை மாற்றுப் பெறுநர்களுடனும் பின்வருமாறு உடன்படிக்கை செய்கிறோம். முதலாவதாக, ரூபாய் ..... என்ற மேற்கண்ட அசல் தொகையுடன், ஆண்டுக்கு ..... சதவீத வட்டியையும் ..... ஆண்டு ..... மாதம் ..... தேதியன்று மேற்கண்ட ..... அவர்களுக்கு அல்லது அவர்களது உரிமை மாற்றுப் பெறுநர்களுக்கு நாங்கள் / எங்களது வாரிசு நிறுவனங்கள் செலுத்த வேண்டும். இரண்டாவதாக, மேற்கண்ட நாளில் அசல் தொகை செலுத்தப்படாவிட்டால், அத்தொகை அல்லது அதன் எந்தவொரு பகுதியும் செலுத்தப்படாமல் நிலுவையில் இருக்கும் காலம் முழுவதும், செலுத்தப்படாத முழுத் தொகை அல்லது அதன் நிலுவைப் பகுதியின் மீது ஆண்டுக்கு ..... சதவீத வட்டியை, ஒவ்வொரு ஆண்டும் ..... மற்றும் ..... ஆகிய தேதிகளில் சமமான அரையாண்டுத் தவணைகளாக மேற்கண்ட ..... அவர்களுக்கு நாங்கள் அல்லது எங்களது வாரிசு நிறுவனங்கள் செலுத்த வேண்டும். மேற்கண்ட அசல் தொகை மற்றும் வட்டியை இவ்வாறு திருப்பிச் செலுத்துவதை உறுதிசெய்வதற்காக, ... என்ற பெயருடைய மீன்பிடிப் படகை, அதிகாரப்பூர்வ எண் ....., பதிவு செய்யப்பட்ட துறைமுகம் ..... மற்றும் அப்படகுடன் தொடர்புடைய அனைத்து உபகரணங்கள் மற்றும் பிற இணைப்புப் பொருட்கள் உள்ளிட்டவற்றுடன் மேற்கண்ட ..... அவர்களுக்கு நாங்கள் இதன்மூலம் அடமானம் வைக்கிறோம். இறுதியாக, மேற்கண்ட படகையும் அதனுடன் தொடர்புடைய அனைத்து உபகரணங்கள் மற்றும் இணைப்புப் பொருட்களையும் அடமானம் வைப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் உள்ளது என்றும், அப்படகு தொடர்பான பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைத் தவிர வேறு எந்தவிதமான வில்லங்கங்களும் அப்படகின் மீது இல்லை என்றும், நாங்கள் எங்களது சார்பாகவும் எங்களது வாரிசு நிறுவனங்கள் சார்பாகவும் மேற்கண்ட ..... அவர்களுக்கும் அவர்களது உரிமை மாற்றுப் பெறுநர்களுக்கும் உறுதியளிக்கிறோம்.

இதற்குச் சாட்சியாக, ... ஆண்டு ..... மாதம் ..... தேதியன்று எங்களது பெயர்(களையும்) நிறுவனத்தின் பொதுமுத்திரையையும் இப்பத்திரத்தில் பதித்துள்ளோம்.

மேற்கண்ட நபரால் எனது முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது	நிறுவனத்தின் சார்பாகவும் அதன் பெயரிலும் கையொப்பம்(கள்)

கையொப்பம்: .....

பதவி: .....

நிறுவனத்தின் முத்திரை: .....

அலுவலக முத்திரை: .....

மேற்கண்ட அடமானப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்புத் தொகையைத் தீர்ப்பதற்காக, ரூபாய் ..... தொகையைப் பெற்றுக்கொண்டேன்.

தேதி: ..... இடம்: ..... ஆண்டு ..... மாதம் ..... தேதியன்று.

எனது முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

கையொப்பம்: .....

பதவி: .....

அடமானம் பெறுபவரின் கையொப்பம்(கள்)

[FVR படிவம் VI]
இந்திய அரசால் வழங்கப்பட்டது
தற்காலிகப் பதிவுச் சான்றிதழ்
[விதி 18(1)-ஐக் காண்க]

..... என்ற மீன்பிடிப் படகு, அதிகாரப்பூர்வ எண் ....., ... டன் கொள்ளளவு கொண்டது என்றும், ... அவர்களுக்குச் சொந்தமானது என்றும் இதன்மூலம் சான்றளிக்கப்படுகிறது. பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும் வரை, மேற்கண்ட மீன்பிடிப் படகு கடலில் இயக்கப்படுவதற்கு இதன்மூலம் அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்தத் தற்காலிகச் சான்றிதழ் மூன்று மாத காலத்திற்கு அல்லது மீன்பிடிப் படகிற்கு பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும் நாள் வரை, இவற்றில் எது முந்தையதோ அதுவரை செல்லுபடியாகும்.

துறைமுகம்: .....

தேதி: .....

மீன்பிடிப் படகின் பதிவாளர்

படிவம் FVI 1

[விதி 44(1)-ஐ காண்க]

மீன்பிடிப் படகின் ஆய்வுச் சான்றிதழ்

(CERTIFICATE OF INSPECTION OF A FISHING VESSEL)

இந்தச் சான்றிதழுடன், இந்திய அரசின் அதிகாரத்தின் கீழ், வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிப் படகுகள்) விதிகள், 2026-இன் விதிகளின்படி வழங்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் படகுத் தகவல்கள் குறித்த பதிவேடும் இணைக்கப்பட வேண்டும்.

மீன்பிடிப் படகு தொடர்பான விவரங்கள்

விவரம்	தகவல்
படகின் பெயர் மற்றும் விளக்கம்	.....
படகு அடையாள எண்	.....
பதிவு எண் மற்றும் பதிவு செய்யப்பட்ட துறைமுகம்	.....
உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி	.....
கட்டப்பட்ட தேதி (நாள்/மாதம்/ஆண்டு)	.....
உந்துவிசை இயந்திரத்தின் திறன் (kW)	.....
ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை	.....

இதன்மூலம் பின்வருவன சான்றளிக்கப்படுகின்றன:

1. வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிப் படகுகள்) விதிகள், 2026-இன் பொருந்தக்கூடிய விதிகளின்படி இந்த மீன்பிடிப் படகு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது, வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிப் படகுகள்) விதிகள், 2026-இல் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தேவைகளுக்கு இந்தப் படகு இணங்கியுள்ளது என்பது கண்டறியப்பட்டது:

(i) படகின் கட்டமைப்பு, நிலைத்தன்மை, இயந்திரங்கள் மற்றும் மின்சார நிறுவுதல்கள்.
(ii) பாதுகாப்பு உபகரணங்கள், பாதுகாப்பு வழிசெலுத்தல் உபகரணங்கள் மற்றும் வானொலி தகவல் தொடர்பு உபகரணங்கள்.
(iii) மோதலைத் தடுப்பது மற்றும் கடல் மாசுபாட்டைத் தடுப்பது தொடர்பான அனைத்து பொருத்தமான தேவைகளும்.

3. படகின் நடுப்பகுதியில் (Amidships), படகின் பக்கவாட்டில் குறியிடப்பட்டுள்ள மிதப்புக் கோட்டின் உயரம் (Free board) ..... மி.மீ. என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4. மற்ற அனைத்து அம்சங்களிலும், மீன்பிடிப் படகு தொடர்புடைய விதிகளின் தேவைகளுக்கு இணங்கியுள்ளது. வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிப் படகுகள்) விதிகள், 2026-இன் தொடர்புடைய தேவைகளுக்கு மீன்பிடிப் படகு இணங்கியுள்ளது.

இந்தச் சான்றிதழ் வழங்குவதற்கான அடிப்படையாக அமைந்த ஆய்வு நிறைவு செய்யப்பட்ட தேதி: ..... (நாள்/மாதம்/ஆண்டு).

இந்தச் சான்றிதழ் ..... வரை (நாள்/மாதம்/ஆண்டு) செல்லுபடியாகும். இருப்பினும், வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிப் படகுகள்) விதிகள், 2026-இன்படி ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மற்றும் படகின் அடிப்பகுதியின் வெளிப்புறப் பகுதியை ஆய்வு செய்வதற்கு உட்பட்டதாகும்.

..... இடத்தில், 20..... ஆம் ஆண்டு ..... மாதம் ..... ஆம் நாளன்று வழங்கப்பட்டது.

கீழே கையொப்பமிடுபவர், இந்தச் சான்றிதழை வழங்குவதற்கு மேற்கண்ட அரசால் முறையாக அதிகாரம் அளிக்கப்பட்டவர் என அறிவிக்கிறார்.

கையொப்பம்: .....

(அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்)

அதிகாரப்பூர்வ முத்திரை

வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிப் படகுகள்) விதிகள், 2026-இன்படி கட்டமைப்பு, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் நிலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் வருடாந்திர ஆய்வுக்கான ஒப்புதல் பதிவு

இதன் மூலம் சான்றளிக்கப்படுவது யாதெனில் வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிப் படகுகள்) விதிகள், 2026-இன்படி மேற்கொள்ளப்பட வேண்டிய வருடாந்திர ஆய்வின்போது, அந்தப் படகு மேற்கண்ட விதிகளின் தொடர்புடைய தேவைகளுக்கு இணங்கியுள்ளது என்பது கண்டறியப்பட்டது.

வருடாந்திர ஆய்வு: கையொப்பம்:

(அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்)

இடம்: .....

தேதி: .....

(தேவைக்கேற்ப அதிகாரியின் முத்திரை அல்லது அச்சு முத்திரை)

மீன்பிடிப் படகின் அடிப்பகுதியின் வெளிப்புறப் பகுதியை ஆய்வு செய்ததற்கான ஒப்புதல் பதிவு

இதன் மூலம் சான்றளிக்கப்படுவது யாதெனில் வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிப் படகுகள்) விதிகள், 2026-இன்படி மேற்கொள்ளப்பட வேண்டிய படகின் அடிப்பகுதியின் வெளிப்புறப் பகுதி ஆய்வின்போது, அந்தப் படகு மேற்கண்ட விதிகளின் தொடர்புடைய தேவைகளுக்கு இணங்கியுள்ளது என்பது கண்டறியப்பட்டது.

முதல் ஆய்வு: கையொப்பம்

(அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்)

இடம்: .....

தேதி: .....

(தேவைக்கேற்ப அதிகாரியின் முத்திரை அல்லது அச்சு முத்திரை)

இரண்டாவது ஆய்வு: கையொப்பம்:

(அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்)

இடம்: .....

தேதி: .....

(தேவைக்கேற்ப அதிகாரியின் முத்திரை அல்லது அச்சு முத்திரை)

புதுப்பித்தல் ஆய்வுக்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளபோது செய்யப்படும் ஒப்புதல் பதிவு

இதன் மூலம் சான்றளிக்கப்படுவது யாதெனில் வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிப் படகுகள்) விதிகள், 2026-இன் தொடர்புடைய விதிகளுக்கு, நீட்டிக்கப்பட்ட காலப்பகுதி முழுவதும் அந்தப் படகு இணங்கியுள்ளதாகக் கருதப்பட்டதால், இந்தச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் ..... வரை இதன் மூலம் நீட்டிக்கப்படுகிறது.

கையொப்பம்

(அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்)

இடம்: .....

தேதி: .....

(தேவைக்கேற்ப அதிகாரியின் முத்திரை அல்லது அச்சு முத்திரை)

புதுப்பித்தல் ஆய்வு நிறைவு செய்யப்பட்டபோது செய்யப்படும் ஒப்புதல் பதிவு

இதன் மூலம் சான்றளிக்கப்படுவது யாதெனில்: வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிப் படகுகள்) விதிகள், 2026-இன் தொடர்புடைய விதிகளுக்கு, நீட்டிக்கப்பட்ட காலப்பகுதி முழுவதும் அந்தப் படகு இணங்கியுள்ளதாகக் கருதப்பட்டதால், இந்தச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் ..... வரை இதன் மூலம் நீட்டிக்கப்படுகிறது.

கையொப்பம்

(அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்)

இடம்: .....

தேதி: .....

(தேவைக்கேற்ப அதிகாரியின் முத்திரை அல்லது அச்சு முத்திரை)

படிவம் FVI 2

[விதி 53-இன் துணைவிதி (1)-ஐக் காண்க]

உபகரணங்கள் மற்றும் மீன்பிடிப் படகு தொடர்பான தகவல்களின் பதிவேடு

(RECORD OF EQUIPMENT AND FISHING VESSEL INFORMATION)

(இந்தப் பதிவேடு, மீன்பிடிப் படகின் ஆய்வுச் சான்றிதழுடன் நிரந்தரமாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.)

வணிகக் கப்பல் போக்குவரத்து (மீன்பிடிப் படகுகள்) விதிகள், 2026-க்கு இணங்குவதற்காக

1. படகு தொடர்பான விவரங்கள்

படகின் பெயர்: .....

பதிவு எண்: .....

பதிவு செய்யப்பட்ட துறைமுகம்: .....

2. உயிர் காக்கும் உபகரணங்கள் தொடர்பான விவரங்கள்

(கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வரியிலும், சம்பந்தப்பட்ட உபகரணம் / வசதி இருந்தால் "வழங்கப்பட்டுள்ளது (..... எண்ணிக்கை)" எனக் குறிப்பிடவும். இல்லையெனில், பொருந்தும் வகையில் "இல்லை / பொருந்தாது (Nil / NA)" எனக் குறிப்பிடவும்.)

வ. எண்	**உயிர்காக்கும் உபகரணத்தின் பெயர்**	**வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை / நிலை**
1	உயிர்காக்கும் மிதவைப் படகு (Life raft)	
2	மிதவை உபகரணம் (Buoyant Apparatus)	
3	உயிர்காக்கும் கவச உடை (Life Jacket)	
4	விளக்குடன் கூடிய உயிர்காக்கும் மிதவை வளையம்	
5	கயிறுடன் கூடிய உயிர்காக்கும் மிதவை வளையம்	
6	பாராசூட் ராக்கெட்	
7	கையால் பயன்படுத்தும் சிவப்பு எரிகுறிகள் (Red Flares)	
8	ஆரஞ்சு நிறப் புகைச் சமிக்ஞைகள்	
9	கருப்பு நிறச் சதுரம் மற்றும் வட்டம் கொண்ட ஆரஞ்சு நிறத் துணி	
10	சாயக் குறியீட்டுக் கருவி (Dye Marker)	

11	பந்து குறியீட்டுடன் கூடிய சதுரக் கொடி	
12	சிவப்பு நிறத் துணி அல்லது விரிப்பு	
13	விசில்	
14	கண்ணாடி	
15	மின்விளக்கு (Torch)	

3. வழிசெலுத்தல் அமைப்புகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான விவரங்கள்

(கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வரியிலும், சம்பந்தப்பட்ட உபகரணம் / வசதி இருந்தால் "வழங்கப்பட்டுள்ளது (..... எண்ணிக்கை)" எனக் குறிப்பிடவும். இல்லையெனில், பொருந்தும் வகையில் "இல்லை / பொருந்தாது (Nil / NA)" எனக் குறிப்பிடவும்.)

வ. எண்	**உபகரணத்தின் பெயர்**	**வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை / நிலை**
1	கையடக்கத் திசைகாட்டி (Handheld Bearing Compass)	
2	சரிசெய்யப்பட்ட காந்தத் திசைகாட்டி / பிற மாற்று வழிமுறைகள்	
3	ஆழமானி / மீன் கண்டறியும் கருவி (Echo Sounder / Fish Finder)	
4	உலகளாவிய இடங்காட்டி (GPS)	
5	X-பேண்ட் ரேடார்	
6	ரேடார் பிரதிபலிப்பான் (Radar Reflector)	
7	கடல்சார் வரைபடங்கள் மற்றும் வெளியீடுகள் / மின்னணு வரைபடக் காட்சி மற்றும் தகவல் அமைப்பு (ECDIS#)	
8	வழிசெலுத்தல் விளக்குகள் மற்றும் குறியீடுகள்	
9	மருத்துவ உபகரணத் தொகுப்பு	
10	முதலுதவிப் பெட்டி	

4. வானொலி வசதிகள் தொடர்பான விவரங்கள்

(கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வரியிலும், சம்பந்தப்பட்ட உபகரணம் / வசதி இருந்தால் "வழங்கப்பட்டுள்ளது (..... எண்ணிக்கை)" எனக் குறிப்பிடவும். இல்லையெனில், பொருந்தும் வகையில் "இல்லை / பொருந்தாது (Nil / NA)" எனக் குறிப்பிடவும்.)

வ. எண்	உபகரணத்தின் பெயர்	வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை / நிலை
1	எடுத்துச் செல்லக்கூடிய நீளமான கம்பி ஆண்டெனா (Portable Whip Antenna)	
2	EPIRB (406 MHz / Inmarsat) – அவசரகால இருப்பிடத்தைக் குறிக்கும் வானொலி கலங்கரை விளக்கு	
3	SART / AIS SART – தேடுதல் மற்றும் மீட்பு டிரான்ஸ்பாண்டர்	
4	மின்கலத்தின் திறன் (மணி நேரங்களில்)	
5	DSC வசதியுடன் கூடிய VHF வானொலி	
6	கையடக்க VHF வானொலி	
7	INMARSAT SES அல்லது DSC வசதியுடன் கூடிய MF/HF வானொலி	
8	டிரான்ஸ்பாண்டர் (Transponder)	

5. எண்ணெய் மாசுபாட்டைத் தடுக்கும் உபகரணங்கள் தொடர்பான விவரங்கள்

(குறிப்பிட்ட விவரங்களை நிரப்ப வேண்டிய வரிகளைத் தவிர, மற்ற வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணம் / வசதி இருந்தால், அதற்கு எதிரே உள்ள வலதுபுறப் பெட்டியில் "ஆம் (Yes)" எனக் குறிப்பிடவும். அந்த உபகரணம் / வசதி பொருந்தாததாக இருந்தால், அப்பகுதியை வெறுமையாக விடவும்.)

<table>
<tr><td colspan="2">1. எண்ணெய் வடிகட்டும் உபகரணம் (Oil Filtering Equipment)</td><td>.....</td></tr>
<tr><td colspan="3">1.1 தயாரிப்பு நிறுவனம் மற்றும் மாதிரி:.....</td></tr>
<tr><td colspan="3">1.2 அதிகபட்சச் செயலாக்கத் திறன் (m^3/மணி):.....</td></tr>
<tr><td colspan="3">1.3 அங்கீகாரத் தரநிலை:.....</td></tr>
<tr><td colspan="2">2. எண்ணெய் கலந்த பில்ஜ் நீரைச் சேமிப்பதற்கான தொட்டி(Holding Tank for Oily Bilge)</td><td></td></tr>
<tr><td>தொட்டியின் அடையாளம்</td><td>தொட்டியின் அமைவிடம்</td><td>கொள்ளளவு (m^3)</td></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td>மொத்தக் கொள்ளளவு (m^3):</td><td>.....</td></tr>
<tr><td colspan="2">3. கழிவு எண்ணெயைச் சேமிப்பதற்கான தொட்டி (Holding Tank for Waste Oil):</td><td></td></tr>
</table>

தொட்டியின் அடையாளம்	தொட்டியின் அமைவிடம்	கொள்ளளவு (m^3)
	மொத்தக் கொள்ளளவு (m^3):	.....
4. தரநிலைப்படுத்தப்பட்ட வெளியேற்ற இணைப்பு (Standard Discharge Connection):		.....

6. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் உபகரணங்கள் தொடர்பான விவரங்கள்

(குறிப்பிட்ட விவரங்களை நிரப்ப வேண்டிய வரிகளைத் தவிர, மற்ற வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணம் / வசதி இருந்தால், அதற்கு எதிரே உள்ள வலதுபுறப் பெட்டியில் "ஆம் (Yes)" எனக் குறிப்பிடவும். அந்த உபகரணம் / வசதி பொருந்தாததாக இருந்தால், அப்பகுதியை வெறுமையாக விடவும்.)

1. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Sewage Treatment Plant): .....
1.1 தயாரிப்பு நிறுவனம் மற்றும் மாதிரி: .....
1.2 சுத்திகரிப்புத் திறன் (நபர்களின் எண்ணிக்கை): .....
1.3 அங்கீகாரத் தரநிலை: .....
2. கழிவுநீர் கடத்தல் மற்றும் கிருமிநீக்க அமைப்பு (Sewage Conveying and Disinfecting System): .....
2.1 தயாரிப்பு நிறுவனம் மற்றும் மாதிரி: .....
2.2 அங்கீகரித்த நிறுவனம்: .....
3. கழிவுநீரைச் சேமிப்பதற்கான தொட்டி (Holding Tank for Sewage): .....
3.1 கொள்ளளவு (m^3): .....
4. தரநிலைப்படுத்தப்பட்ட வெளியேற்ற இணைப்பு (Standard Discharge Connection): .....

7. ஒழுங்குமுறை 13 மற்றும் NOx தொழில்நுட்பக் குறியீடு, 2008-இன் கீழ் வெளியேற்ற வரம்புகளைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான விவரங்கள்

விவரம்	இயந்திரம் 1	இயந்திரம் 2
பெயர் மற்றும் மாதிரி		
வரிசை எண்		
ஆற்றல் வெளியீடு (kW)		
நிர்ணயிக்கப்பட்ட சுழற்சி வேகம் (RPM)		
Tier I (இணக்கமாக இருந்தால் "ஆம்" எனக் குறிக்கவும்)		

Tier II (இணக்கமாக இருந்தால் "ஆம்" எனக் குறிக்கவும்)		
Tier III (இணக்கமாக இருந்தால் "ஆம்" எனக் குறிக்கவும்)		

8. கப்பல் அடிப்பகுதியில் உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் ஒட்டுவதைத் தடுக்கும் பூச்சுப் பாதுகாப்பு அமைப்பு(கள்) (Anti-fouling System(s)) பயன்படுத்தப்பட்டது தொடர்பான விவரங்கள்

1. பயன்படுத்தப்பட்ட பூச்சுப் பாதுகாப்பு அமைப்பு(களின்) வகை(கள்):
.....

2. பூச்சுப் பாதுகாப்பு அமைப்பு(கள்) பயன்படுத்தப்பட்ட தேதி(கள்):
.....

3. பூச்சுப் பாதுகாப்பு அமைப்பு பயன்படுத்தப்பட்ட நிறுவனம்(கள்) மற்றும் வசதி / இடம்(களின்) பெயர்(கள்):
.....

4. பூச்சுப் பாதுகாப்பு அமைப்பின் தயாரிப்பாளர்(களின்) பெயர்(கள்):
.....

5. பூச்சுப் பாதுகாப்பு அமைப்பின் பெயர்(கள்) மற்றும் நிறம்(கள்):
.....

6. செயலில் உள்ள மூலப்பொருள்(கள்) மற்றும் அவற்றின் வேதியியல் சுருக்கப் பதிவுச் சேவை எண்(கள்) (CAS Number(s)):
.....

7. பொருந்தும் இடங்களில், சீலர் பூச்சின் (Sealer Coat) வகை(கள்):
.....

8. பொருந்தும் இடங்களில், பயன்படுத்தப்பட்ட சீலர் பூச்சின் பெயர்(கள்) மற்றும் நிறம்(கள்):
.....

9. சீலர் பூச்சு பயன்படுத்தப்பட்ட தேதி:
.....

இதன் மூலம் சான்றளிக்கப்படுவது யாதெனில் இந்தப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் எல்லா வகையிலும் சரியானவை.

..... இடத்தில், 20..... ஆம் ஆண்டு ..... மாதம் ..... ஆம் நாளன்று வழங்கப்பட்டது.

அதிகாரப்பூர்வ முத்திரை

அங்கீகரிக்கப்பட்ட
கையொப்பமிடுபவர்

படிவம் – AFV-1

படகு உரிமையாளர் / படகுத் தலைவர் மற்றும் மீனவர் இடையிலான ஒப்பந்தம்

[விதி 64-இன் துணைவிதி (3)-ஐக் காண்க]

பகுதி A – மீனவர் விவரங்கள்

மீனவரின் முழுப் பெயர்:.....

பிறந்த தேதி: __ / __ / _____ வயது: _____ பாலினம்: _____

நிரந்தர முகவரி:.....

அடையாள விவரங்கள் (மீனவர் அடையாள அட்டை):

வகை: _____ எண்: _____

பகுதி B – படகு மற்றும் பணியமர்த்துபவர் விவரங்கள்

மீன்பிடிப் படகின் பெயர்:.....

பதிவு எண்: _____

பதிவு செய்யப்பட்ட துறைமுகம்:.....

உரிமையாளர் / பணியமர்த்துபவரின் பெயர் மற்றும் முகவரி:

.....

உரிமையாளர் / பணியமர்த்துபவரிடமிருந்து வேறுபட்டவராக இருந்தால், படகுத் தலைவரின் பெயர்:.....

பகுதி C – பணியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்

மீனவர் பணியமர்த்தப்படும் பொறுப்பு / பதவி (தரம் / பணி): .....

ஒதுக்கப்பட்ட பணிகள்: .....

மீனவர் பணியமர்த்தப்படும் பயணம் / பயணங்கள்:.....

உத்தேசிக்கப்பட்ட மீன்பிடிப் பகுதிகள்:.....

செயல்பாட்டு வரம்புகள்:.....

பணி தொடங்கும் தேதி: __ / __ / _____

இந்த ஒப்பந்தத்தின் கால அளவு (பொருந்தும் இடங்களில்):__ / __ / _____ முதல் __ / __ / _____ வரை

☐ காலவரையற்றது / ரத்து செய்யப்படும் வரை.

பகுதி D – ஊதியம் / பிடிக்கப்பட்ட மீன்களில் பங்கு

கட்டணம் செலுத்தும் முறை (பொருந்துவதை ✓ எனக் குறிக்கவும்):

☐ நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம்

☐ பிடிக்கப்பட்ட மீன்களில் பங்கு

☐ ஊதியம் மற்றும் பிடிக்கப்பட்ட மீன்களில் பங்கு ஆகிய இரண்டின் சேர்க்கை

ஊதியம் மற்றும் / அல்லது பிடிக்கப்பட்ட மீன்களில் வழங்கப்படும் பங்கு தொடர்பான விவரங்கள்:

கட்டணம் செலுத்தப்படும் கால இடைவெளி:

☐ வாரந்தோறும்

☐ இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை

☐ மாதந்தோறும்

☐ ஒவ்வொரு பயணத்திற்கும்

☐ பிற முறை: _____

பொருந்தக்கூடிய சட்டத்தின்படி அனுமதிக்கப்பட்ட கழிவுகள் ஏதேனும் இருப்பின் அவற்றின் விவரங்கள்:

பகுதி E – ஓய்வு, கண்காணிப்புப் பணி, மருத்துவம் மற்றும் காப்பீடு

ஒரு நாளுக்கு / வாரத்திற்கு வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச ஓய்வு நேரம்:

கண்காணிப்புப் பணி தொடர்பான கடமைகள் (ஏதேனும் இருப்பின்):

மருத்துவப் பராமரிப்பு மற்றும் நோய்வாய்ப்பட்ட காலத்திற்கான நலத்தொகை பெறும் உரிமை (கொள்கை / திட்டத்தின்படி சுருக்கமான விளக்கம்):

காயம் ஏற்பட்டால் வழங்கப்படும் இழப்பீடு மற்றும் இறப்பு நலத்தொகைகள் (காப்பீட்டுக் கொள்கை / திட்டத்தின்படி):

காப்பீடு / திட்டத்தின் பெயர்:.....

காப்பீட்டுக் கொள்கை / திட்ட எண்:.....

காப்பீட்டின் கீழ் வழங்கப்படும் பாதுகாப்பு குறித்த சுருக்கமான விளக்கம்: .....

தேவையான இடங்களில், பணியமர்த்தப்பட்ட இடத்திற்குத் திரும்பிச் செல்லும் உரிமை உட்பட, சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுவதற்கான உரிமை (Repatriation Entitlement):

பகுதி F – பணிநீக்கம், பணியிலிருந்து விடுவித்தல் மற்றும் திருத்தம்

இரு தரப்பினரில் எவரேனும் ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முன் அறிவிப்புக் காலம்:.....

கடலில் இருக்கும்போது ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சிறப்புக் காரணங்கள் (எடுத்துக்காட்டாக, கடுமையான தவறான நடத்தை, பணியாற்ற இயலாமை போன்றவை):.....

பணியிலிருந்து விடுவிப்பதற்கான சூழ்நிலைகள் (பயணம் முடிவடைதல், இருதரப்பினரின் பரஸ்பர ஒப்புதல் போன்றவை):.....

ஒப்பந்தத்தில் திருத்தம் செய்தல்:

இந்த ஒப்பந்தத்தில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும். மேலும், இரு தரப்பினரும் அதில் கையொப்பமிட்டு, படகுத் தலைவரால் எதிரொப்பமிடப்பட வேண்டும்.

பகுதி G – சிறார் மீனவர் (பொருந்தும் இடங்களில் மட்டும்)

(பொருந்தக்கூடிய சட்டத்தின்படி மீனவர் சிறாராக இருக்க அனுமதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் மட்டும் இந்தப் பகுதியை நிரப்பவும்.)

பெற்றோர் / சட்டப்பூர்வ பாதுகாவலரின் பெயர்:.....

மீனவருடனான உறவுமுறை:.....

பெற்றோர் / சட்டப்பூர்வ பாதுகாவலரின் முகவரி:.....

ஒப்புதல்:

கீழே கையொப்பமிடும் நான், மேற்கண்ட பெற்றோர் / சட்டப்பூர்வ பாதுகாவலர் என்ற முறையில், இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கண்ட மீனவர் பணியில் அமர்த்தப்படுவதற்கு இதன்மூலம் எனது ஒப்புதலை வழங்குகிறேன்.

பெற்றோர் / சட்டப்பூர்வ பாதுகாவலரின் கையொப்பம்:.....

தேதி: __ / __ / _____

பகுதி H – உறுதிமொழி மற்றும் கையொப்பங்கள்

பணி தொடங்குவதற்கு முன்பாக / படகு கடலுக்குச் செல்வதற்கு முன்பாக (இவற்றில் எது முந்தையதோ அதற்கு முன்பாக) இந்த ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை நாங்கள் படித்து, புரிந்துகொண்டுள்ளோம் என்றும், அவற்றுக்குக் கட்டுப்பட்டு நடக்க ஒப்புக்கொள்கிறோம் என்றும் இதன்மூலம் உறுதியளிக்கிறோம்.

மீனவர்

பெயர்: .....

கையொப்பம் / கைரேகை:.....

தேதி: __ / __ / _____

சாட்சி

சாட்சியின் பெயர்:.....

சாட்சியின் முகவரி:.....

சாட்சியின் கையொப்பம்:.....

தேதி: __ / __ / _____

உரிமையாளர் / அங்கீகரிக்கப்பட்ட முகவர் / படகுத் தலைவர்

பெயர்:.....

பொறுப்பு / தகுதி (உரிமையாளர் / முகவர் / படகுத் தலைவர்):.....

கையொப்பம்:.....

தேதி: __ / __ / _____

அட்டவணை II (SCHEDULE II)
விதி 67-ஐப் பார்க்கவும்

கட்டணங்கள் (FEES)

A. பதிவு செய்வதற்கான கட்டணங்கள்

வரிசை எண்	விவரம்	கட்டணம் (ரூ.)
1	7 டன் வரை மொத்த எடையுள்ள மீன்பிடிப் படகின் ஆரம்பப் பதிவு	100
2	7 டன்னுக்கு மேல், 25 டன் வரை	500
3	25 டன்னுக்கு மேல், 50 டன் வரை	750
4	50 டன்னுக்கு மேல், 75 டன் வரை	1,000
5	75 டன்னுக்கு மேல், 100 டன் வரை	2,000
6	100 டன்னுக்கு மேற்பட்ட படகுகள்	முதல் 100 டன்னுக்கு ரூ.2,000 + அதன் பிறகு ஒவ்வொரு டன்னுக்கும் ரூ.100
7	பதிவு விவரங்களில் மாற்றம் செய்தல்	500
8	பதிவு செய்யப்பட்ட துறைமுகத்தை மாற்றுதல்	1,000
9	உரிமை அல்லது உரிமைப் பங்கினை மாற்றிப் பதிவு செய்தல்	1,000

B. ஆய்வுக்கான கட்டணங்கள்

வரிசை எண்	விவரம்	திருத்தப்பட்ட கட்டணம் (₹)
1	24 மீட்டர் அல்லது அதற்குக் குறைவான பதிவு செய்யப்பட்ட நீளமுள்ள மீன்பிடிப் படகுகள்	1,000
2	24 மீட்டருக்கு மேற்பட்ட நீளமுள்ள மீன்பிடிப் படகுகள்	ரூ.1,000 + 24 மீட்டருக்கு மேல் உள்ள ஒவ்வொரு மீட்டருக்கும் ரூ.200
3	ஆய்வுச் சான்றிதழின் நகல் வழங்குதல்	500

வெங்கடேசப்பதி. எஸ்
இணைச் செயலாளர்